Registered as a news paper.    பக்கங்கள்: பன்னிரண்டு    விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
இழந்த பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
பொருத்திக்கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக் கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2486

கிளை நிறுவனங்கள்

இல 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இல 80, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 24 (10.09.2004) வெள்ளிக்கிழமை இதழ்:343

## நோர்வே தேசிய கொடியை பௌத்த பிக்குகள் எரிப்பு!

### தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சியில் அனுசரணையாளராகப் பங்கேற்கும் நோர்வே, உடனடியாகத் தமது மத்தியஸ்தப் பணிகளை நிறுத்தவேண்டும் எனக் கோரி, கொழும்பிலுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாகர்கோவில் காவலரண்களை பின்நகர்த்துமாறு பரிந்துரை!

## அரசு - புலிகளிடம் கண்காணிப்புக்குழு கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நாகர்கோவில் பகுதியிலுள்ள தமது முன்னரங்கக் காவல் நிலையங்களைப் பின்நகர்த்த வேண்டுமென, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருதரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நாகர்கோவில் பகுதி முன்னரங்கக் காவலரண்களை முன்னோக்கி நகர்த்தி வருவதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இராணுவத்தினர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, நாகர்கோவில் பகுதிக்குச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள், இருதரப்பினரும் தமது காவலரண்களை முன்னோக்கி நகர்த்தியுள்ளதால் - இருதரப்பினரும் தமது முன்னரங்கக் காவல்நிலைகளைப் பின்நோக்கி நகர்த்தவேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

சில இடங்களில் இருதரப்பினரதும் பதுங்கு குழிகளுக்கிடையிலான இடைவெளி 20 மீற்றர்கள்கூட இல்லை என்பது அவதானிக்கப்பட்டிருப்பதால், இவற்றைப் பின்னோக்கி நகர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

முன்னைய அமைவிடங்கள் குறித்து இரு தரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்ட பின்னரே, காவல்நிலைகள் பின்நோக்கி நகர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈவினையில் நேற்றுமாலை குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் - ஈவினைப் பகுதியில் இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது - நேற்று மாலை 5.30 மணியளவில் தோட்டத்திற்காக தனது வீட்டிற்கருகில் மாட்டெருவை ட்ரக்டரிலிருந்து இறக்கிக்கொண்டிருந்தபோது அவ்வழியே வீதியால் வந்துகொண்டிருந்த இருவர் அவரருகில் வந்து துப்பாக்கியால் மார்பில் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகத் தெரியவருகிறது.

இறந்தவரின் மார்பில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. 63 வயதான அருணாசலம் முத்தையா என்ற இந்தக் குடும்பஸ்தரின் சடலம் நேற்றுமாலை 7 மணியளவில் இறந்தவரின் குடும்ப அங்கத்தவரால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன் சர்வகட்சி ஆலோசனைசபை அமைப்பு

## புதிய திட்டத்தை முன்வைக்கிறது அரசாங்கம்

### கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்திய தூதுவரை சந்திப்பு

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்திய தூதுவரை சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நேற்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவை சந்தித்து பேச்சு நடததினர்.

இந்தச் சந்திப்பு ஒரு சம்பிரதாய பூர்வமான சந்திப்பெனவும், இதில் அரசியல் ரீதியான விடயங்கள் எதுவும் பேசப்படவில்லை எனவும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய திட்டத்தை முன்வைக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் – அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஆலோசனைப்படியே ஜனாதிபதி சந்திரிகா தீர்மானங்களை எடுக்கவுள்ளார்.**

இவ்வாறு, சபை முதல்வரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றில் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. ரத்னசீல தேரர் ஆகியோர் தொடுத்த வினாக்களுக்கு பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை, ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)



## கச்சதீவில் இறக்கி விடப்பட்ட

# 28 ஈழத் தமிழ் அகதிகளும் மயக்கமடைந்த நிலையில்!

## தப்பி வந்த மூவர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்த 28 ஈழத்தமிழ் அகதிகளை ஏற்றிவந்த இந்திய மீன்பிடிப் படகு அவர்களை ஏமாற்றி கச்சதீவில் இறக்கிவிட்டு சென்றதனால் அவர்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 28 ஈழத்தமிழ் அகதிகள், (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# நலன்புரி நிலைய சிறார்களுக்கான சித்திரப் போட்டியின் முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

ச்ர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் சிறுவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளோர் விபரங்களை யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தினர் வெளியிட்டுள்ளனர்.

இதன்படி 10 முதல் 14 வயதுக் குட்பட்டோர் 50 பேரும், 14 முதல் 18 வயதுக்குட்பட்டோர் 50 பேரும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான இறுதிப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 வயதுக்குட்பட்டோர் விபரம் வருமாறு -

மகாலிங்கம் நிஷாந்தன் (மல்லாகம்), சூரியகுமார் அஜித் (மல்லாகம்), நஜீப் அர்சாத் (யாழ்ப்பாணம்), பிரஷாந்தினி ஜெயசாந்தன் (உரும்பிராய்), வெற்றிவேல் ரூபிகா (தும்பளை), றெஜீவன் றகுந்தன் (உரும்பிராய்), அசுறுதீன் சுஜித் (யாழ்ப்பாணம்), அன்ரன் மரியதாஸ் ஜெயபால் (குடத்தனை), சவாகீர் சஜானா (நாவாந்துறை), சிவலிங்கம் தனேஸ்வரன் (சுழிபுரம்), எம்.சப்றாஸ் (யாழ்ப்பாணம்), தனுஷியா குமாரசாமி (குடத்தனை), சுகுமார் மேரி டிலக்ரினா (சுன்னாகம்), பிரியதர்சினி சோதிலிங்கம் (மயிலிட்டி), கோடீஸ்வரன் எழிலேஸ் (நவாலி), தனுஷன் ராசகுமார் (அளவெட்டி), சிவனேஸ்வரன் சியாமினி (உரும்பிராய்), இஸ்மாயில் பாத்திமா ஹன்சா (யாழ்ப்பாணம்), தங்கவேல் சாந்தரூபி (சுன்னாகம்)

சுலைமான் நமீஸா (யாழ்ப்பாணம்), எஸ்.சகீர் (யாழ்ப்பாணம்), முகமட் அலி றசான் அலி (யாழ்ப்பாணம்), குவாலினி வசந்தகுமார் (சுழிபுரம்), கருணாகரன் சுப்பிரமணியம் (சுழிபுரம்), சர்மிளராணி மோகன் (உடுவில்), சிவராசா கம்சயன் (கோப்பாய்), பிறேமிகா சந்திரன் (உரும்பிராய்), கிருஷ்ணானந்தம் நாகேந்திரம் (உரும்பிராய்), செல்வரத்தினம் தினேஷ்குமார் (குடத்தனை), என்.தர்ஷிகா (குடத்தனை), அந்தோனிமுத்து சுபாஷினி (குடத்தனை), பூலோகநாதன் திருக்குமரன் (உரும்பிராய்), பன்னீர்ச்செல்வன் நாகதீபன் (குடத்தனை), குகராசா பிரதீபன் (இணுவில்), தங்கராசா ரகுவரன் (சுழிபுரம்), எ.நிரோஜினி (கோணப்புலம்), இன்பராசா அன்ரன் யோகராசா (சுழிபுரம்), சற்குணம் அர்ஜுன் (இணுவில்), கலிஸ்ரா சிவனேஸ்வரன் (இணுவில்), பௌசிகா வேல்நாயகம் (குடத்தனை), சிவராசா அகல்யா (உரும்பிராய்), ரவீந்திரன் தனேஸ் (சுழிபுரம்), நிருஜா தனபாலசிங்கம் (உரும்பிராய்), பூபாலன் விவேக் (உடுவில்), தங்கவேல் கலிகரணன் (கற்கோவளம்)

பி.சசி (சுழிபுரம்), பாலசிங்கம் பானுகா (குடத்தனை), செல்வராஜா ரஜீவன் (மல்லாகம்), அனித்தா சுவேந்திரராஜன் (சுன்னாகம்).

### 14 வயதுக்கு மேற்பட்டோர்

செல்வநாதன் பார்த்திபன் (தும்பளை), ரட்ணசிங்கம் ரதீப் (உடுவில்), நாகராசா தயாளினி (உடுவில்), நாகராஜா மோகனகிருஷ்ணன் (உடுவில்), திருவருட்செல்வி பூலோகநாதன் (உரும்பிராய்), பெனிபஸ் ஜேசுதாஸ் (சுன்னாகம்), இராஜரட்ணம் ராஜ்சுதன் (சுன்னாகம்), ராஜரட்ணம் ராஜகாந்தன் (சுன்னாகம்), மகாலிங்கம் யசோதா (உரும்பிராய்), செல்வசிவகுமார் ருவேந்திரன் (உரும்பிராய்), செல்வசிவகுமார் அஜீவன் (உரும்பிராய்), அரியராசா சாதனா (மல்லாகம்), பிரசாந்தினி பொன்ராசா (மல்லாகம்), இமானுவேல் பிறின்ஸ் ஜீவிதன் (குடத்தனை), நிக்கல் பெனடிக் அருள்நேசன் (குடத்தனை), சிவதாஸ் நிலோஷன் (குடத்தனை), பத்மநாதன் முகுந்தன் (குடத்தனை).

எஸ்.செந்தூரன் (உரும்பிராய்), உதயகுமார் லுஷாந் (நவாலி), சுபகா தயாபரன் (மானிப்பாய்), ஜிந்துயா சிவயோகராசா (மானிப்பாய்), கல்பனா வடிவேலு (மானிப்பாய்), ரவிச்சந்திரன் சிவராசா (சுழிபுரம்), செல்லத்துரை ஜோன் (சுன்னாகம்), நல்லதம்பி கபில்தேவி (இணுவில்), நல்லதம்பி ரஜீவன் (இணுவில்), நடேசன் மேகலா (மல்லாகம்), டேவிட் மதன் (மல்லாகம்), குகிந்தகுமார் குணசிங்கம் (மல்லாகம்), பாலச்சந்திரன் ரமணன் (குடத்தனை), பூபாலசிங்கம் விஸ்வமூர்த்தி (குடத்தனை), தங்கவேல் சிவரூபி (மயிலிட்டி).

ஐயாத்துரை நிதர்சன் (மல்லாகம்), பொன்ராசா சாந்தினி (மல்லாகம்), எஸ்.சுரேஸ் (அம்பன்), தம்பிநைனார் சுதாகினி (அம்பன்), சஹிர் சம்சன் (யாழ்ப்பாணம்), ராசதுரை நிரோஜா (அளவெட்டி), நகுலேஸ்வரன் கஜேந்தினி (அளவெட்டி), அரவிந்தன் இராஜேந்திரம் (அளவெட்டி), சந்திரசேகரம் நவகிரி (அளவெட்டி), மேனகா முருகமூர்த்தி (மல்லாகம்).

இராசரட்ணம் சிவச்சந்திரன் (மல்லாகம்), பத்மலோஜினி சின்னராசா (மல்லாகம்), பாலசுப்பிரமணியம் விஜிதா (குடத்தனை), இராசதுரை வளர்மதி (உரும்பிராய்), கதிர்வேலு நிஷாந்தினி (உரும்பிராய்), இ.ரமேஸ் (சுழிபுரம்), ஆர்.சிவானந்தராசா (சுழிபுரம்), ராசேந்திரம் ரஜீவ் (சுன்னாகம்).

இவர்களுக்கான இறுதிப் போட்டியில் வெற்றியீட்டும் 10 பேர் கொழும்பில் நடைபெறும் சிறுவர்தின சித்திரக் கண்காட்சிப் போட்டிக்காக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அழைத்துச் செல்லப்பட்டு சுற்றுலா வசதியும் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

# ருபெல்லா சின்னமுத்து தடுப்பூசி ஏற்றல்
## தனியார் கல்வி நிறுவனங்களின் வகுப்புக்களை நிறுத்தக் கோரிக்கை

16 வயது முதல் 20 வயதுக் குட்பட்ட மாணவர்களுக்கான ருபெல்லா சின்னமுத்து தடுப்பூசி மருந்தேற்றல் - நாளையும், நாளை மறுதினமும் காலை முதல் மாலை வரை, கன்னாதிட்டி - விஞ்ஞானக் கல்வி நிறுவனம், கன்னாதிட்டி - புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம், ஸ்ரான்லி வீதி - விக்னா கல்வி நிறுவனம், நாவலர் வீதியிலுள்ள பொருளியற் கல்லூரி, ஆரியகுளம் சந்திக்கருகிலுள்ள டானியல் கல்வி நிறுவனம் என்பவற்றில் வைத்து வழங்க மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இரு நாட்களும் - யாழ். நல்லூர் பிரதேசத்துக் குட்பட்ட க.பொ.த உயர்தர வகுப்புக்களை நடத்தும் கல்வி நிறுவனங்கள், வகுப்புக்களை நிறுத்தி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிவித்துள்ளது.

அத்துடன், தடுப்பூசி மருந்தேற்றும் மேற்படி நிலையங்கள் உட்பட ஏனைய சுகாதார நிலையங்களுக்கும், மாணவர்கள் செல்வதற்கு வசதிகளை தனியார் கல்வி நிறுவன ஒன்றியமும், தமிழீழ சுகாதார சேவையும் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வழங்கல் கட்டளைகளை இன்று பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ப.நோ.கூ. சங்கங்கள் தமக்குரிய ஏப்ரல் மாத உலருணவு விநியோகத்திற்குரிய வழங்கல் கட்டளைகளை யாழ்.செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் இன்று பெற்று விநியோகத்தினை ஓரிரு தினங்களில் மேற்கொள்ளுமாறு செயலகத்திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் பூடு, ஊறுகாய், மோர் மிளகாய், சீயாக்காய் பவுடர், பிளீச்சிங் பவுடர், ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் - முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல.777, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/3022)











# சின்னஞ்சிறு செய்திகள்

## ஒற்றுமைக்கான மக்கள் அரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் ஒற்றினைவை இலக்காகக் கொண்டு செயற்படும் யாழ். பல்கலைக்கழக பண்பாட்டுக் குழுவின் ஒற்றுமைக்கான மக்கள் அரங்கு நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, இந்த மக்கள் அரங்கில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பண்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

## யோகாசன கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தும்பளை யோகசாந்தி நிலையத்தால் யோகாசன கண்காட்சி ஒன்று இன்று மாலை 2.30 மணியளவில் யா.சன்மார்க்க வித்தியாலயத்தில் - அதிபர் எஸ்.மாணிக்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி பாடசாலை மாணவர்களுக்கானது. எனவே, மாணவர்கள் இந்தக் கண்காட்சியை பார்ப்பதன் மூலம் தேக ஆரோக்கியம் மன அமைதி போன்றவற்றிற்கு தம்மை ஆளாக்கி, நல்வழியில் தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(14)

## சேவைநலம் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை கல்விக்கோட்டப் பணிப்பாளராக இருந்து நேற்றுடன் ஓய்வுபெற்ற சி.செல்லையாவிற்கு, இந்தக் கல்விக்கோட்டத்தின் அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வி சாரா அலுவலர்களால் சேவைநலம் பாராட்டு விழா நடாத்தப்படவுள்ளது.

இந்தப் பாராட்டுவிழா நாளை காலை 9.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் - அதிபர் சங்கத் தலைவர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், வலி.மேற்கு பிரதேசசெயலர் சி.ஏ.மோகன்றாஸ், சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (48)

# பயிற்சிக்குத் தெரிவாகாத பட்டதாரிகள் கவனத்துக்கு!

அரசாங்கத்தினால் தற்போது அமுல்நடாத்தப்படுகின்ற பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தின் கீழ், பிரதேச செயலகங்கள் மூலம் விண்ணப்பித்து இதுவரை பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படாத பட்டதாரிகள், இவ்வாறு தெரிவுசெய்யப்படாமை தொடர்பான முழுவிபரங்களுடன் - முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்திற்கு, மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக தமது விண்ணப்பத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு மேன் முறையீடு செய்பவர்கள் விண்ணப்பம் செய்த திகதிக்கு முன்பு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களைப் பெற்று, பிரதேச செயலகங்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி, பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட பட்டியலில் பெயர்குறிப்பிடப்பட்டவர்களாகவும், இதுவரை அரச தனியார் துறைகளில் நிரந்தரமான வேலையற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட அதிபர் தெரிவித்துள்ளார்.


6 மாதம் யாழ்ப்பாணத்தில் M.M.I.C 20 % கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைசார் தபால்மூலம் கற்கைநெறி

Diploma in Massemedia

Dip.in.m.m.(Sri lanka) சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி லேன்,மணியம் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Call: 0777316258


# நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 X 4 அங்குலம் ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

**மத்திய பிரிவு-** க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

**மேற்பிரிவு -** அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

**போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-**

நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். - நமது ஈழநாடு பணிமனை, யாழ் சாலை, கிளிநொச்சி.

# திருமலை கன்னியா பகுதியில் படையினர் புதிய காவலரண்!

(திருகோணமலை)

திருகோணமலை கன்னியா பகுதியில் படையினர் நேற்றுமுன்தினம் புதிய காவலரண் ஒன்றை அமைத்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு படையினர் இந்தப் பகுதியில் புதிய காவலரண் அமைத்ததையிட்டு அந்தப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்த நிலையிலுள்ளனர்.

முன்னர் கன்னியா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் படையினர் முகாமிட்டிருந்தனர். பின்னர் பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்காகப் பலர் விடுத்த கோரிக்கையை அடுத்து படையினர் அந்தப்பகுதி முகாமைமூடி சில மாதங்களுக்குப் பின்னர் தற்போது அந்தப் பாடசாலைக்கு அருகில் இந்தப் புதிய காவலரணை அமைத்துள்ளனர்.

எதிர்காலத்தில் இந்தக் காவலரணில் நிற்கும் படையினர், வாகன சோதனை மற்றும் பயணம் மேற்கொள்ளும் மக்களை சோதனை செய்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடலாமென அந்தப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

இதேவேளை திருமலை அலஸ் தோட்டப் பகுதியில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் படையினர் பாரியளவிலான காவலரண் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தவேளை, அதனை அப்பகுதி மக்கள் எதிர்த்ததனால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

ஆனால், தற்சமயம் அந்தக் காவலரணை மீளவும் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். சுமார் 30 படையினர்வரை தங்கிநிற்கக்கூடிய அளவிற்கே இந்தக் காவலரண் அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(04)

# கருணாவே பயங்கரமான நபரென்கிறார் ஜனாதிபதி!

(கொழும்பு)

கருணா மிகவும் பயங்கரமான நபர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.



அண்மையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றில், கருணாவுக்கு அரசாங்கம் ஏன் உதவிசெய்யக்கூடாது என ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

ஆயுத முரண்பாடுகளுக்கு ஆயுத பலாத்காரத்தைப் பிரயோகித்து தீர்வுகண்டுவிடமுடியாது. எந்தப் பிரச்சினைக்கும் பேச்சுமூலமே தர்வுகாணமுடியும் என்று தான் கருதுவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பயங்கரவாதத்துக்குத் தீர்வாக இன்னுமொரு பயங்கரவாதத்தை வளர்பபதற்கு நான் விரும்பவில்லை. அவ்வாறு நடந்துகொண்ட முன்னைய தலைவர்கள், அவர்கள் வழங்கிய ஆயுதங்களாலேயே கொல்லப்பட்ட வரலாற்றை எவரும் மறந்து விடமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவை புலிகள் கொலைசெய்திருக்கமுடியாது

## பிரட்மன் வீரக்கோன் கூறுகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவை விடுதலைப் புலிகள் கொலைசெய்திருக்கமுடியாதென, பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகராக இருந்த பிரட்மன் வீரக்கோன் தனது புத்தகமொன்றில் தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் வைத்து இந்தவருடம் வெளியிடப்பட்ட அந்தப் புத்தகத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் கொலையில் விடைகாணமுடியாத சில விடயங்கள் உள்ளன. பிரேமதாஸா 1993 ஆம் ஆண்டு கொழும்பு ஆமர் வீதியில் மேதின ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளியான பாபு என்பவரால் கொல்லப்பட்டதாக பொலிஸாரும், ஊடகத்துறையினரும் தெரிவித்தனர்.

பிரேமதாஸ ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தவேளை பாபு என்பவர் சைக்கிளில் வந்ததாகவும், அவர் பிரேமதாஸவை அணுகமுற்பட்டவேளை அதற்கு அவர் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும், படப்பிடிப்பாளரின் படத்தில் சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட உடல்களில் தலைகுழம்பிய நிலையில் உயரமான ஒரு மனிதன் சைக்கிளுடன் உயிரிழந்த நிலையில் கிடக்கக் காணப்பட்டான்.

அத்துடன் சிறிய ரேடியோ மற்றும் அதற்குரிய வயர்கள் என்பன அவரது மேல் நெஞ்சுப்பகுதிக்குள் கிடக்கக் காணப்பட்டது. அப்போது இது வெடிகுண்டெனவே சொல்லப்பட்டது.

ஆனாலும், ஊடகங்கள் காட்டியதுபோல் அது பாபுவினுடைய முகம் அல்ல. பொலிஸார் அது பாபுவினுடையதுதான் எனத் தெரிவிக்கும்வரை நான் ஒருபோதும் பாபுவைக் கண்டதோ, அவர் தொடர்பான பெயரைக் கேட்டதோ இல்லை.

நான் பிரேமதாஸவின் வதிவிடத்துக்கு அடிக்கடி விஜயம் செய்பவன். அங்கும் இந்த பாபு தொடர்பாக நான் கண்டறியவோ, கேட்கவோ இல்லை.

எனவே எனக்குத் தெரிந்தவகையில் பாபு என்பவர் அங்கு வந்ததற்கான எவ்வித ஆதாரமும் இல்லையென பிரட்மன் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர், எம்பிக்களின் சம்பளம் அதிகரிக்காது!

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

நாடாளுமன்ற உறுப்பினர்கள மற்றும் அமைச்சர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் எந்தவொரு திட்டமும் அரசாங்கத்திடம் இல்லையென அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களினதோ, அமைச்சர்களினதோ, ஜனாதிபதியினதோ சமபளம் 10 ரூபாவால் கூட அதிகரிக்கப்படமாட்டாது. மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அரசாங்கம் அறிந்திருக்கிறது. உயர்நீதிமன்ற மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

# அத்தியாவசிய பொருட்களுக்கு வற் வரியை நீக்கவேண்டும்!

## அமைச்சர் திஸ்ஸ விதாரண கோரிக்கை

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்படும் பெறுமதிசேர் வரியை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அமைச்சர் திஸ்ஸ விதாரண நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் பொதுமக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கான பெறுமதிசேர் வரி நீக்கப்படவேண்டும்.

ஆடம்பரப் பொருட்களுக்கான பெறுமதி சேர் வரியை அதிகரிக்கச்செய்யும் அதேவேளை-வெளிநாடுகளுக்குச் செல்லும் விஞ்ஞானிகளையும், நிபுணர்களையும் நாட்டில் தங்கவைக்க முயற்சித்துவருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சின் அடிப்படையில்தான் பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ளது

## ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தான், இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ளது என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்தது.

அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 570 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கடனாகப் பெறவுள்ளது.

அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்வித்துறையை மேம்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்களுக்கு இந்தநிதி பயன்படுத்தப்படும். பொருளாதார அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள் என்பவற்றுககாக இந்த நிதியை வழங்குவது குறித்து ஆராய்ந்து வருவதாக, ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடககு - கிழக்கு பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அதிகரித்துச் செல்லும் இலங்கையின் வரவு - செலவுத்திட்ட துண்டுவிழும் தொகை, கனிய எண்ணெய்களின் விலை அதிகரிப்பு என்பன இலங்கையின் பொருளாதாரத்தை பாதிக்கும் காரணிகளாகுமென ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

# இன்று அல்லது 13 ஆம் திகதி அமைச்சுப்பதவிகளை ஏற்குமாம்

இலங்கை தொழிலானர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று அல்லது எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமையன்று அமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

மிருகவள அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கடடமைப்பு வசதிகள் அமைச்சராக முத்து சிவலிங்கமும், அதன் பிரதி அமைச்சராக செல்லச்சாமியும் இன்று பதவியேற்கலாம் என அந்தக்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

# புலிகளின் இடைக்கால யோசனை, புதிய முஸ்லிம் கட்சி எதிர்க்காதாம்

வட-கிழக்கிற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்த விடுதலைப் புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதில் தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையென்று -

ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி என்ற புதிய கட்சி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, முஸ்லிம்களின் உரிமையை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டே உம்மா என்ற ஐக்கிய முஸ்லிம் முன்னணி உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கென விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வடக்கில் நிறுவுவதற்காக முன்வைத்துள்ள யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை, எனினும் அதில் முஸ்லிம்களின் உரிமைகள் உள்ளடக்கப்படவேண்டும்.

உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுபடவேண்டும் என்றும் இந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த புதிய கட்சியின் தலைவராக மருத்துவ கலாநிதி ஏ.எல்.எச்.ஜமீனும், காப்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் அமைப்பாளர் மயோன் முஸ்தபாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(01)

# கூட்டமைப்பு எம்.பிக்களின் திருமலை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் திருமலைக்கான விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விஜயத்தின்போது இவர்கள் அனைவரும் மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்து உரையாடவுமிருந்தனர். இருப்பினும் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு மேலும் தொடர்வதாலும், அனைத்து எம்.பிக்களும் திருமலை செல்லும் பயணத்துக்கு இடையே கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்களாலும் இந்த விஜயம் பிறபோடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் முஸ்லிம்களைச் சந்திப்பது, தற்போதைய நிலைப்பாட்டை மக்களுக்குப் புரியவைப்பது, இடைக்கால நிர்வாக அலகு குறித்த ஒரு தெளிவை உருவாக்குவது போன்ற விடயங்களில் தொடர்ந்தும் கவனமெடுப்பார்கள் என்று தெரியவருகிறது.

# அரச விடுமுறை நாட்களை குறைப்பதற்கு நடவடிக்கை

அரச திணைக்களங்களை மிகவும் செயற்திறனுள்ளதாக மாற்றும் வகையில், அரச விடுமுறை நாட்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கவனத்தில் எடுத்துள்ளது.

2004 ஆம் ஆணடில் சனி மற்றும் ஞாயிறு தினஙகள் உட்பட அரச ஊழியர்களுக்கு 121 விடுமுறை நாட்கள் உள்ளன. வேலைசெய்யும் நாட்களின் எண்ணிக்கை 262. இவற்றுள் 27 நாட்கள் விடுமுறையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு ஒரு வருடத்துக்கு 45 நாட்களும் விடுமுறை வழங்கப்படுகிறது. அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அரச திணைக்களங்கள் செயற்படும் முறைகளையும் கவனத்தில் எடுத்து, விடுமுறை நாட்களைக் குறைத்துக்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

விடுமுறை நாட்களைக் குறைப்பது தொடர்பான நடவடிக்கையின்போது மத விடுமுறைகள் விசேட கவனத்தில் எடுக்கப்படும் எனவும் அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

(தே)

# ஐ.சி.சி கிரிக்கெட் சம்பியன் போட்டி இங்கிலாந்தில் இன்று ஆரம்பம்!




(லண்டன்)

ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டி இன்று இங்கிலாந்தில் தொடங்கவுள்ளது.

மினி உலகக் கிண்ணப் போட்டி என்று அழைக்கப்படும் ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டி 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. 1998 ஆம் ஆண்டு டாக்காவில் நடந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்கா சம்பியனானது.

2000 ஆம்ஆண்டு நைரோபியில் நடந்த 2 ஆவது போட்டியில் நியூஸிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்றியது. 2002 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த போட்டியில் இந்தியாவும், இலங்கையும் இணைந்து கிண்ணத்தைக் கைப்பற்றின.

இந்த ஆண்டு 4 ஆவது ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் இன்று தொடங்கவுள்ளது. 25 ஆம் திகதிவரை போட்டிகள் நடைபெறும்.

இதில் 12 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்க அணிகளும், 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளும், 'சி' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், கென்யாவும், 'டி' பிரிவில் இலங்கை, இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் ஒரு அணி மற்ற இரண்டு அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். இதில் முதல் இடத்தைப் பிடிக்கும் அணி அரையிறுதிக்குத் தகுதிபெறும்.

இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் கென்யாவை 11 ஆம் திகதியும், 2 ஆவது ஆட்டத்தில் 19 ஆம் திகதி பாகிஸ்தானையும் எதிர்கொள்கிறது.

இந்திய அணியில் நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கர் காயம் காரணமாக ஆடவில்லை. அவருக்குப் பதிலாக ரோகன் கவாஸ்கர் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொடக்க நாளான இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறும். ஒரு ஆட்டத்தில் 'டி' பிரிவில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து - சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியின் சில ஆட்டங்கள் சிம்பாப்வேயில் வைத்து நடைபெற்றது. பாதுகாப்பு காரணங்கள் கருதி நாசர் ஹு"சைன் தலைமையிலான இங்கிலாந்து அணி சிம்பாப்வே சென்று விளையாட மறுத்துவிட்டது. அதற்குப் பிறகு இரு நாடுகளும் முதல் முறையாக நாளை மோதுகின்றன.

'ஏ' பிரிவில் நடைபெறும் ஆட்டத்தில் நியூஸிலாந்து - அமெரிக்க அணிகள் மோதுகின்றன. இதில் பலம்வாய்ந்த நியூஸிலாந்து அணியும், இங்கிலாந்தும் எளிதில் வெற்றி பெற்றுவிடும். ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டியின் ஆட்டங்கள் இன்று மாலை 4.00 மணிக்குத் தொடங்கவுள்ளது.

# உலக டெஸ்ட் அணி தேர்வு; என்னை பழிவாங்கியுள்ளனர்

## முரளிதரன் விசனம்



லண்டனில் நடைபெற்ற ஐ.சி.சி உலக டெஸ்ட் அணித் தேர்வில் தன்னை சிலர் ஓரங்கட்டி பழிவாங்கியிருப்பதாக இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் விசனம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நேற்றுமுன்தினம் சிறந்த கிரிக்கெட் வீரர், உலக டெஸ்ட் அணி, ஒருநாள் போட்டி உலக அணி, புதுமுக வீரர் உட்பட பல விருதுகள் வழங்கப்பட்டது.

உலக டெஸ்ட் அணிக்கான தேர்வில் சுழற்பந்து வீச்சாளர்களில் அவுஸ்ரேலிய வீரர் வோர்ன் இடம்பெற்றிருந்தார். இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் முரளிதரன் தேர்வுக் குழுவினரில் சிலர் தனிப்பட்ட முறையில் தன்னைப் பழிதீர்த்து விட்டனர் எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது -

தேர்வுக் குழுவில் சிலருக்கு என்னைத் தனிப்பட்ட முறையில் பிடிக்கவில்லை. நான் முறையாக பந்துவீசுவதில்லை என கருதுகிறார்கள். உலக டெஸ்ட் அணியில் இடம்பெறாததற்கு இதுவே காரணம்.

தேர்வு நடைபெற்ற காலங்களில் 8 ஆட்டங்களில் ஆடி 68 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளேன். சராசரி 17.47 வைத்துள்ளேன். உலக அணியில் இடம்பெறுவதற்கான தகுதிகள் என்னிடம் உள்ளது. எனது பந்துவீச்சு முறையை அவர்கள் விதிமுறைகளுக்கு மாறானது என கூறுகிறார்கள்.

வோர்ன் ஒரு வருடம் விளையாட தடைசெய்யப்பட்டார். அதன் பிறகு விளையாடி 527 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். 6 மாதம் விளையாடியவர்களுக்கெல்லாம் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு முரளிதரன் கூறினார்.

# பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(சுதுமலை)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கமும், சுதுமலை யுவசக்தி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் யுவசக்தி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (91)

# மினி உலகக் கிண்ணப் போட்டி நாயகர்கள்



# இந்திய பயணத்துக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு

(மெல்போர்ண்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து நான் டெஸ்ட் போட்டிகளில் விளையாட வுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் (ஒக்ரோபர்) 6 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இதில் பங்கேற்கும் அவுஸ்ரேலிய அணியை அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதில் அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் மக்கில், சைமன்ஸ் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அணி விபரம் வருமாறு -

ரிக்கி பொன்டிங் (கப்டன்), கில்கிறிஸ்ட், கிளார்க், ஹைடன், லாங்கர், ஜிலெஸ்பி, நதன் குர்டிஸ், சைமன் காடிச், கஸ்பரோவிச், மார்ட்டின், மெக்ரா, பிரெட்லீ, லீமன், வோர்ன், வட்சன், வைற்.

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

# தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஜப்பானிடம் இந்தியா தோல்வி

(கொல்கத்தா)

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்திய அணி 0-4 என்ற கோல் கணக்கில் ஜப்பானிடம் தோல்வி கண்டது.

உலகக்கிண்ண உதைபந்தாட்ட தகுதிக்கான ஆசிய சுற்று ஆட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இந்திய-ஜப்பான் அணிகள் மோதின. கொல்கத்தாவில் இந்தப் போட்டி நடைபெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில் இந்திய அணி ஜப்பானுக்கு சற்று ஈடு கொடுத்து ஆடியது. 45 ஆவது நிமிடத்தில் சுசுகி முதல் கோலை அடித்தார். இதனால் முதல் பாதியில் ஜப்பான் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னணி வகித்தது.

பின் பாதியில் ஜப்பான் மளமளவென்று மேலும் 3 கோல்கள் அடித்தது. 59 ஆவது நிமிடத்தில் ஒரேலிவும், 71 ஆவது நிமிடத்தில் புக்னிஸ்சும், 89 ஆவது நிமிடத்தில் கப்டன் மியா மோடோவும் அடுத்தடுத்து கோல் அடித்தனர்.

இந்திய அணி வீர்களால் இறுதி வரை பதில் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. முடிவில் ஜப்பான் அணி 4-0 என்ற கோல் கணக்கில் சிரமமின்றி வெற்றிபெற்றது.

ஏற்கனவே இந்திய அணி முதல் சுற்று ஆட்டத்தில் 0-7 என்ற கோல் கணக்கில் ஜப்பானிடம் தோல்வி கண்டிருந்தது.

இந்த வெற்றியின் மூலம் ஜப்பான் 9 புள்ளிகள் பெற்று முன்னணி வகிக்கிறது. ஓமான் 6 புள்ளிகளுடனும், இந்தியா 3 புள்ளிகளுடனும், இந்தியா 3 புள்ளிகளுடனும் உள்ளன. சிங்கப்பூர் புள்ளியெதுவும் பெறவில்லை. இந்திய அணி அடுத்த ஆட்டத்தில் ஓமானுடன் மோதுகிறது.




# றோஜர் பெடரர், ஆந்த்ரே அகாசி அரையிறுதிப் போட்டிக்கு தகுதி



(நியூயோர்க்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர், இரண்டாம் நிலை வீரர் ரோட்டிக் (அமெரிக்கா), அகாசி (அமெரிக்கா) உட்பட 8 பேர் மோதவுள்ளனர்.

ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து), அகாசி (அமெரிக்கா), டொமினிக் (ஸ்லோவாக்கியா), டிம் ஹெமன் (இங்கிலாந்து), டோமிஹாஸ் (இங்கிலாந்து), ஹெவிட் (அவுஸ்ரேலியா), அன்டி ரோட்டிக் (அமெரிக்கா), ஜோகன்சன் (சுவீடன்) ஆகியோரே காலிறுதியில் மோதவுள்ளனர்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட், சிபுனோவுடன் (ஜப்பான்) மோதினார்.




இதில் டேவன்போர்ட் 6-1, 6-1 என்ற நேர் செட் கணக்கில் சிபுனோவைத் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தார்.



மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை சுவட்லனா சக நாட்டு வீரர்ங்கனையான பெட்ரோவாவுடன் மோதினார். இதில் சுவட்லனா 7-6, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றார்.

19 வயதாகும் சுவட்லனா கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் முதன் முறையாக அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

அரையிறுதியில் மோதும் வீராங்கனைகள் விபரம் வருமாறு -

டேவன்போர்ட் (அமெரிக்கா), சுவட்லனா (ரஷ்யா), ஜெனிபர் கெப்ரியாட்டி (அமெரிக்கா), எலீனா டெமன்டிவா (ரஷ்யா).

# மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையம், காந்திஜி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தீவக ரீதியில் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (51)

# ஒருநாள் தர வரிசையில் டெண்டுல்கர் முதலிடம்!



(லண்டன்)

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் தரவரிசைப் பட்டியலை பிரைஸ் வோட்டர் கவுஸ் கூப்பர் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் டெண்டுல்கர் 784 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக பொன்டிங் 771 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்திலும், கலிஸ் (தென்னாபிரிக்கா), கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா), கெய்ல் (மேற்கிந்தியத்தீவுகள்), பிளமிங் (நியூஸிலாந்து), ஹைடன் (அவுஸ்ரேலியா), சர்வான் (மேற்கிந்தியத்தீவுகள்), சங்ககார (இலங்கை), பிளின்ரொப் (இங்கிலாந்து) ஆகியோர் முறையே 3 முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளனர்.

# மூவினக் கலைஞர்கள் பங்கேற்கும் இளையோர் கலைக்கதம்ப நிகழ்வு!

"கலைகளினூடாக சமூகங்களை இணைக்கும் முயற்சியாக யாழ். திருமறைக்கலாமன்றத்தினர் கலைக்கதம்ப நிகழ்ச்சியொன்றை எதிர்வரும் 27ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலைக் கதம்பத்தில் மூவினங்களையும் சேர்ந்த பல கலைஞர்களினது கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான ஆயத்தங்கள், நிகழ்ச்சி ஒத்திகைகள் தற்போது யாழ். திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்று வருவதாக திருமறைக் கலாமன்றத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன், மூவினங்களையும் சேர்ந்த ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று திருமறைக்கலாமன்ற ஏற்பாட்டில் கலைக்கதம்ப நிகழ்வுக்காக ஜேர்மனி, லண்டன், பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளுக்கும் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. (கு)

# மங்கள வாத்திய கலைஞர்கள் மீது இளைஞர் குழுவொன்று தாக்குதல்

நல்லூர் சுற்றாடலில் திரிந்த இளைஞர்களால் நல்லூர் ஆலய ஆஸ்த்தான மங்கள வாத்தியக் கலைஞர்கள் தாக்கப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் நல்லூர்க் கந்தனின் இரவு உற்சவத்தை நிறைவு செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களை இளைஞர் குழுவொன்று தாக்கி விட்டுத்தப்பிச்சென்றது.

சங்கிலியன் வீதிச் சந்தியில் உள்ள உற்சவ காலத்தடைக்கருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது சம்பந்தமாகப் பாதிக்கப்பட்டவர்கள் நல்லூர் உற்சவ காலப்பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேபோன்று, பல அடாவடிச் செயல்கள் ஆலயச் சூழலில் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். (101)

# திருக்குறள் வினாடி வினா போட்டி முடிவுகள் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட திருக்குறள் வினாடி வினாப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன் படி முதலாம் இடத்தை புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தாக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன.

தரம் 10,11 மாணவர்களுக்கென கோப்பாய் கல்விக் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு -

முதலாம் இடம் சு.கலையரசி - வாதரவத்தை, விக்னேஸ்வர வித்தியாலயம், இரண்டாம் இடம் ச.சபிலா வாதரவத்தை, விக்னேஸ்வரா வித்தியாலயம், மூன்றாம் இடம் அ.திவ்யா - நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான பரிசுகள் இன்று நடைபெறவுள்ள சிறுவர் தினத்தன்று வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (44)

# போலி மருந்து விசிறுவோர் குறித்து எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

எந்தப் பகுதி மக்களாயினும் தத்தமது வளவுகளில் உள்ள மாமரம், தென்னை மரத்துக்கு நோய்த்தாக்கம் ஏற்பட்டு மருந்து விசிற வேண்டுமானால் விவசாய சம்மேளனங்களுக்கூடாக அல்லது நேரடியாக விவசாய சேவைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால், உரிய முறையில் மருந்து விசிறப்படும் தனிப்பட்ட நபர்கள் எவருக்கும் தாம் மருந்து விசிற அனுமதி அளிக்கவில்லை. அவ்வாறு கூறிக்கொண்டு வருவோர் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் யாழ். வலயம் மேற்கு விவசாய உத்தியோகத்தர் கே.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

அண்மையில் நல்லூர் விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட சில வீடுகளுக்கு சென்ற நபர்கள் தாம் விவசாயத் திணைக்களத்திலிருந்து வருவதாகவும், மாமரம், தென்னை மரங்களில் ஏற்படுகின்ற நோய்களுக்கு மருந்து விசிறப் போவதாகவும் கூறிப் பணம் பெற்றுக்கொண்டு போலியான மருந்துகளையும் சவர்க்காரத் தண்ணீரையும் விசிறியதாக மக்கள் தம்மிடம் வந்து தெரிவித்ததாக யாழ். வலயம் மேற்கு விவசாய உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சில வீட்டுச் சொந்தக்காரர்கள், அவர்களின் வற்புறுத்தலை உண்மை என நம்பியதால் மருந்து விசிற அனுமதித்ததாகவும் பின்னர் அதில் சந்தேகப்பட்டு விவசாய உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே இது பற்றிய உண்மை தெரிய வந்ததாகவும் ஏமாற்றப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (101)

# உடுவில் கோட்டத்திற்கிடையிலான ஆரம்ப வகுப்பு கல்விக் கண்காட்சி

(உடுவில்)

உடுவில் கல்விக் கோட்ட குடும்பப் பாடசாலைகளுக்கிடையேயான ஆரம்ப வகுப்புக் கல்விக் கண்காட்சி ஒக்ரோபர் முதல் வாரத்தில் நடாத்தப்படவுள்ளது.

கல்விச் செயற்பாடுகளின் தேர்ச்சி மட்டத்தை அதிகரிக்கவும், வகுப்பறை செயற்பாடுகளை மேம்படுத்தி கற்றல் கற்பித்தல் உபகரணங்களை உருவாக்குவதன் மூலம் ஆரம்பக் கல்வி விருத்தியை அதகரிக்க முடியும் என்று உடுவில் கோட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியை வலய, கோட்ட ரீதியான வளத்துறையினர், சேவைக்கால ஆலோசகர், உதவிக் கல்விப்பணிப்பாளர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சென்று மதிப்பீடு செய்வர். மிகச்சிறந்த ஆக்கத்திறன் உபகரணங்களுக்கு மாணவர் சார்பில் ஐந்து இடங்களும், ஆசிரியர் சார்பில் ஐந்து இடங்களும் தெரிவு செய்யப்பட்டு கோட்ட ரீதியான பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (101)

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ். எம்.பிக்கள் கலந்துகொள்வர்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசினாலும், அரசசார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட நிதி உதவியால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன கலந்தாலோசிக்கப்படவுள்ளது. (17)

# கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் நடத்தும் இலக்கியப் போட்டிகள்

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் இவ்வாண்டு கத்தோலிக்க எழுத்தாளர் மத்தியில் ஓர் இலக்கியப் போட்டியை நடத்தவுள்ளது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், ஏற்கனவே வெளிவந்த கவிதைகள் என்பனவற்றில் போட்டியாளர்கள் பங்குபற்றலாம்.

ஆக்கங்கள் அனைத்தும் பொதுச் செயலாளர், தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம், 171ஆவது பவுல் நிலையம், 24 பூந்தோட்ட வீதி, கொழும்பு என்ற விலாசத்துக்கு இந்த மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைப் போட்டியில் பங்குபற்றுவோருக்கு வயதெல்லை இல்லை. கவிதை, கட்டுரை ஓவியப் போட்டிகளில் மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

பரிசில்களும், சான்றிதழ்களும் 2004.12.03ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழாவில் வழங்கப்படவிருக்கின்றது. (21)

### மந்திகை வைத்தியசாலையில் உள்ளகத் தொலைபேசி

(பருத்தித்துறை)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் 60 உள்ளகத் தொலைபேசிகள் பொருத்தப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைக் கூடம், ஆய்வு கூடங்கள், அலுவலகங்கள் மற்றும் விடுதிகளிலே இந்தத் தொலைபேசிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதனால், ஊழியர்கள் சிரமமின்றி வேலை செய்யக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொலைபேசிகளை அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றே உதவியளித்து பொருத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (14)




யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட யமஹா வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சிப்பட்டறை ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் உரையாற்றுவதையும் அருகில் கம்பனியின் பொது முகாமையாளர் றஞ்சன் டி சில்வா, வர்த்தக முகாமையாளர் தயான் டி சொய்சா, ஜப்பானிய பயிற்றுவிப்பாளர் மிட்சுயி, கடற்றொழில் பிரதிப்பணிப்பாளர் கே. தர்மலிங்கம் சம்மேளன முகாமையாளர் இ.இராசாராம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (21)

# சின்னஞ் சிறு செய்திகள்

### பருத்தித்துறை சந்தையில் சைக்கிள் பாதுகாப்பிடம் அடைக்கப்பட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடம் தனியொருவர் தனக்குச் சொந்தமானது எனக்கூறி முள்ளுக்கம்பி வேலியால் அந்த இடத்தை அடைத்தார்.

மறுநாள் பருத்தித்துறை நகர சபையினர் இதனை அறிந்து சம்பந்தப்பட்டவரிடம் காணி உறுதி போன்றவற்றைப் பார்வையிட்டு இந்த வருடம் வரை தாம் செய்வதற்கு ஒப்புதல் தருமாறும் கேட்டுள்ளனர்.

கடந்த 4, 5 வருடங்களாக இந்த நிலம் ஒரு கோயிலுக்குச் சொந்தமானது எனக்கருதி அந்த இடத்துக்கான நில வாடகையையும் செலுத்தி வந்துள்ளனர்.

தற்போது இந்த வாடகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

### தம்பாட்டி நுணிபுரக்குளம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தம்பாட்டி கிராமத்தின் நுணிபுரக்குளம் உலக உலர் உணவு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கிராமமானது கடற்கரையை அண்டிக்காணப்படுவதால் தரைக்கீழ் நீர் மிகவும் உவர்த்தன்மையாகவுள்ளது. இந்தக் குளத்தை புனரமைத்து மழைத் நீரைச் சேமிப்பதன் மூலம் இந்தக் குளத்து நீதினால் கிராம மக்கள் பெரிதும் பயனடைவர் என நம்பப்படுகிறது. (51)

### பஸ்தரிப்பிடமின்றி பயணிகள் சிரமம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி, தாளையடிப் பகுதிகளில் எந்தவொரு பஸ்தரிப்பிடங்களோ, தங்குமிடங்களோ இல்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பஸ்ஸுக்காக காத்து நிற்கும் பயணிகள் மரங்களின் கீழோ அல்லது வெயிலிலோ நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (14)

### வலிகாமம் வலய அதிபர்களுக்கான கூட்டம்

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று மாலை 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் குறிப்பிட்ட வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (91)

### சிக்கன கடனுதவி சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிராந்திய சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்க தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளை பிராந்தியத் தலைவர் செ.நம்பியாரூரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு சமாசத்தலைவர் சு.சிவசுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார்.

ஒவ்வொரு பகுதி சிக்கன கடன் கூட்டுறவு சங்கத்திலிருந்தும் ஐந்து அங்கத்தவர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

### தாய் - சேய் நலன் தொடர்பான கருத்தமர்வு

(சுதுமலை)

தாய்- சேய் நலனை மேம்படுத்தும் முகமாக குடும்பத்திட்டம் போஷாக்குத் தொடர்பான விசேட கருத்தமர்வு எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நான்கு நாட்கள் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

சங்கானை தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 100 தாய்மார்கள் தெரிவு செய்யப்பட்டு, நான்கு நாட்களும் நான்கு அமர்வுகளாக இது இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பிரிவில் இருந்தும் மூன்று தாய்மார்கள் வீதம் தெரிவு செய்து வழங்கப்படும் இந்தப் பயிற்சியின் முடிவில் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. (94)

### விநாயகர் ஆலயத்துக்கு இராஜ கோபுரம்

வடமராட்சி, புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தில் இராஜ கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

வடமராட்சியில் பிரசித்திபெற்ற புற்றளை விநாயகர் ஆலயத்துக்கு அந்தப் பகுதி மக்களின் உதவியுடன் 50 இலட்சம் ரூபா செலவில் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (14)

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வல்வெட்டித்துறை சிதம்பர கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (14)



## சிநேகிதியே

# "புன்னகைப் பூவே"

வாழ்வில் எந்தச் சூழ்நிலையிலும் பதட்டம் கொள்ளாமல் புன்முறுவல் பூத்தபடி கடமையாற்றக் கற்றுக் கொண்டால், எந்த வித பிரச்சினைகளையும் எதிர்கொண்டு, சவால்விட்டு வாழ்வில் வெற்றிபெற முடியும்.

தொடர்ந்து முயற்சிகள் செய்துவந்த போதிலும் தோல்வியே பரிசாகக் கிடைக்குமானால், எமது நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் மாற்றிக்கொள்ள முற்படவேண்டுமே ஒழிய, விதியையோ, மற்றவர்களையோ குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கலாகாது. அத்தகைய சூழ்நிலைகளில் நிலை குலையாமல் காத்திட அத்தியாவசியமானது குணாதிசயமான புன்முறுவல் எனப்படுகின்ற புன்சிரிப்பேயாகும்.

இன்றைய காலகட்டத்தில் எம்மைப் பதற்றப்பட வைக்கக்கூடிய விடயங்கள் பல உள்ளன. படிப்பு சம்பந்தப்பட்டவை தவிர, தனிப்பட்ட விடயங்களில் எல்லாம்கூட குழப்பம் விளைவிக்கத்தக்க, விடயங்கள் பல உளளன. அவற்றினால் பாதிப்பு ஏற்பட நாமே வழிவகுத்துக் கொண்டால், பெரிய பிரச்சினைகளில் எங்களைக் கொண்டு சென்று தள்ளிவிடும்.

உடல்ரீதியாக மட்டுமல்ல, மனரீதியாகவும்தான் மனதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுசென்று, பக்குவமாக வைத்துக் கொள்ள நாங்கள் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு முதற்படி மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதுதான். அதன் வெளிப்பாடு முகத்தில் தெரிந்துவிடும். அதாவது புன்னகை பூத்த முகத்தின் வாயிலாகவே.

அதனால்தானோ, என்னவோ அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொன்னார்கள். மனித மனம் என்பது தூங்குகின்ற பயில்வான் போன்றது. சரியான முறையில் தட்டி எழுப்பி தயவுசெய்யாவிடில், சக்தி வீணாகிவிடும். அதற்கு இடம் கொடுக்கலாமா? இடம் கொடுக்காமலிருக்க மனதையும், உடலையும் பக்குவமாகப் பாதுகாத்திட வேண்டும். அதற்கு உண்டான ஒரே வழி மனதை மகிழ்ச்சியாகவும், முகத்தை புன்முறுவல் பூத்தபடியும் வைத்துக்கொள்வதேயாகும்.



திறமையும், சாமர்த்தியமும், தொழில்நுட்ப அறிவும் நிரம்பப் பெற்றவர்கள்கூட கடமையின் சுமை காரணமாக மனம் நொந்து போவதுண்டு. அதைத் தவிர்க்க, மனதை மட்டுமன்றி முகபாவத்தையும்கூட திடமாக வைத்துக் கொள்ளப் பழகவேண்டும்.

நேரில் வந்து முகத்தில் அடித்தால் போல ஏசினால்கூட, நிதானத்தை இழந்துவிடலாகாது. நிதானம் இழந்தால் முகபாவம் மாறும். முகபாவம் மாறினால் முகம் புன்னகையற்று விகாரமானதொரு வடிவை வரவழைத்துக் கொள்ளும்.

எனவே, இவற்றையெல்லாம் தவிர்த்துவிடுவதற்கான ஒரே நல்ல வழி, எது நடந்தாலும், எது வந்தாலும், எது போனாலும் புன்னகை மாறாமல், முகத்தையும் அதன் மூலமாக மனதையும் முறையில் வைத்திருப்பது தான்.

நாங்கள் நினைத்தது நிறைவேறாமல் போனால்கூட, புன்னகை மாறாத பொலிவோடு காரணகாரியங்களை ஆராய முற்படவேண்டுமேயொழிய, துவண்டு போய்விடக் கூடாது. அத்தகைய ஒரு வழக்கத்தைப் பழக்கப்படுத்திக் கொள்வோமேயானால், வெற்றி நிச்சயம் ஏற்படும்.

வாழ்க்கையில் வெற்றி ஏற்பட மாறாத புன்னகையுடன் காரியத்தில் செயற்படுவதே சிறந்த வழியாகும். எல்லோரும் விரும்பும் ஆளாக மாறினால்தான், உங்களை யாரும் வெறுக்கமுடியாது.

# புகுந்த வீட்டுக்கு அடியெடுத்து வைக்கும் பெண்ணே!



*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

மாமியார் - மருமகள் இடையே பிரச்சினை வருகின்ற போது, சின்னச் சின்ன விடயத்துக்கெல்லாம் கணவனிடம் போய் குறை சொல்லக்கூடாது. இது கணவனை தர்மசங்கட நிலைக்கு ஆளாக்கி விடுகின்றது.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பெண்தானே தீர்வு காணப்பழகிக்கொள்ள வேண்டும. எடுத்ததற்கெல்லாம் பிறந்த வீட்டைக் குறைசொல்வதால், தேவையில்லாத வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. அவர்கள் உங்கள் மேலே வைத்திருக்கின்ற அக்கறையில் உதவுவதாக நினைத்து, உங்கள் மனதையும் குழப்பி, பிரச்சினைகளை ஊதிப் பெரிதாக்கிவிட வாய்ப்பு ஏற்படுகின்றது. பாசம் கண்ணை மறைத்துவிடும். இதைவிட நல்ல நண்பியிடம் ஆலோசனை கேட்கலாம்.

புகுந்த வீட்டிலுள்ள எல்லோரையும் அனுசரித்துப் போவது நல்லதுதான். ஆனால், அவை விபரீதத்தில் போய்விடவும் வாய்ப்பிருக்கிறது. எப்போது கதைக்கவேண்டும் என்ன கதைக்க வேண்டும், ஏன் கதைக்க வேண்டும், எங்கே கதைக்க வேண்டும், எப்படிக் கதைக்க வேண்டும் என இந்த ஐந்து விடயங்களும் வாழப்போகின்ற பெண்ணுக்கு அவசியமானதாகும்.

புகுந்த வீட்டில் உள்ளோர் புதிதில் உங்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள். அவையெல்லாம் கொஞ்சக் காலம் மட்டும் என்பதை மறந்துவிடாதீர்கள். அதனைக் கண்டு நீங்களும் முழுக்க முழுக்க உங்களை, குணங்களையும் மாற்றிவிடாதீர்கள்.

தினமும் கணவனோடு சண்டை, கணவன் பதிலுக்கு சண்டை எனப் போடாதீர்கள். அத்தனை கோபங்களையும் வேறு ஒருவரிடம் போய் காட்டாதீர்கள் வீணான சண்டையினால் பின்னர் கவலையடைவது போன்றவை தேவையில்லாத பிரச்சினை. இவற்றை அப்படியே விட்டுவிடுங்கள்.

அடக்கம், பணிவு, விட்டுக் கொடுப்பு போன்ற குணங்கள் அனைத்தும் பெண்களுக்கு கட்டாயம் இருக்கவேண்டும். ஆனால், அதற்கு ஓர் எல்லை இருக்கின்றது. விட்டுக் கொடுத்துப் போகவேண்டும் என்பதற்காக எங்களுடைய சுயமரியாதையையும், மனதிருப்தியையும் இழக்க வேண்டிய அவசியமில்லை. மீறினால் மனநோயாளியாக வேண்டிய நிலை ஏற்படவாய்ப்புண்டு. எந்த அளவுக்கும் பிறர் உங்களிடம் உரிமை கொள்ளலாம். தேவையில்லாத விடயங்களாயின், சரியான முறையில் விளக்கி, மென்மையான முறையில் நீங்கள் உணர்த்திவிட வேண்டும். அப்போதுதான் நீங்கள் நல்லவராகத் திகழமுடியும். குடும்பத்தில் இருக்கின்ற அனைவரும் சந்தோசமாக இருக்க முடியும்.

கணவன் - மனைவி இருவருக்கும் ஏற்படும் பிரச்சினையை அவர்களாகவே தீர்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். இரண்டாவது நபரை வைத்திருப்பது நல்லதல்ல. தீர்க்கப்பட முடியாத அளவுக்குப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பிரச்சினை சிறியதாக இருக்கும் போதே தீர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு மூன்றாவது நபரிடம் பிரச்சினை போகும்போது, உண்மைத்தன்மை மாறிவிட வாய்ப்பு ஏற்படுகின்றது. அது பெற்றோராக இருந்தாலும் சரி, உண்மைப் பிரச்சினை பற்றி யாரும் கதைக்க மாட்டார்கள். அதற்குப் பின் நடைபெறுகின்ற விடயங்களுக்குத்தான் முக்கியத்துவம் கிடைக்கின்றது. திருமணத்துக்கு முன்பே சில விடயங்களைப் பற்றி முடிவு செய்யாமல் விடுவது கூட பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது.

சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கு பெற்றோரிடம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், இருவருக்குமிடையில் பெரிய பிரச்சினை எழுகின்றபோது, தனக்குள்ளே போட்டு மறைத்து வைக்காமல் எடுத்துக் கூறவேண்டும். எவ்வளவு பணத்தை செலவழித்து திருமணத்தைச் செய்து வைத்தார்கள் என நினைத்து, தனக்கு நிகழ்கின்ற கொடுமைகளைச் சொல்லாமல் மறைப்பதால், பெரிய பிரச்சினைகளைச் சந்திக்கநேரிகின்றது.

பெண்களின் பக்கம் பல பிரச்சினைகளையே உருவாக்கி வழிசமைப்பவையாக இருந்தாலும், இதற்கெல்லாம் முகங்கொடுக்க வைப்பது அவர்கள் சிந்தித்து செயற்படுவதனாலேயே ஆகும்.

- தர்சினி -

# முதுமை என்பது கொடுமை அல்ல

வாழ்க்கையில் முதுமை என்பது, தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், அதைக் கண்டு பெண்கள் பயப்படவேண்டியதில்லை. மருத்துவ கண்டுபிடிப்புகளின் மூலமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையில்; முதுமை நிலையில் உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ள சிறந்த முறைகள், சூழ்நிலைகள் இன்று காணப்படுகின்றன. முன்னைய காலத்தைவிட வாழ்நாளை, இளமையை அதிகரிக்கச் செய்வதற்குரிய மருத்துவ வசதிகளும் இன்று நிறையக் காணப்படுகின்றன.

ஆகையால், அளவான உணவு, அமைதியான மனநிலை, சுமுகமான உறவு ஆகியவை மூலம் ஒரு பெண் தன்னுடைய வாழ்க்கையின் முதிய பருவத்தை எளிதாக ஏற்று, மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொள்ள முடியும்.

முதிய பருவம் என்பது எந்த வயதில் ஏற்படும் என்று கூறமுடியாது. நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும் ஒரு பெண், மனதை உற்சாகமாக வைத்துக் கொண்டால், எந்த வயதிலும் இளமையுடன் குதூகலமாக இருக்க முடியும்.

பெரும்பாலும் நாம் வயதாகும் பொழுது ஏற்படும் தளர்ச்சி, சோர்வு, அழகை இழந்துவிடுவது, மனதளவில் ஏற்படும் தளர்ச்சி ஆகியவற்றை மட்டுமே நினைக்கிறோம். ஆனால், அந்த வயதில் எமக்குக் கிடைக்கக்கூடிய எத்தனையோ விதமான நல்ல பலன்களை உணருவதில்லை.



மனித மூளை, தொடர்ந்து அடிக்கடி கூர்மையாக உபயோகிக்கும்போது தான் அதிக சக்தியைப் பெறுகிறது. வயது முதிர்ந்த நிலையில் இதற்குத் தளர்ச்சி ஏற்படுவது இல்லை. எந்த வயதிலும் ஒரு புதிய கலையைக் கற்கலாம். புதிய பயிற்சியை மேற்கொள்ளலாம். வாழ்க்கையில் அடைந்த அனுபவம் காரணமாகத் தங்களைவிட வயதில் இளையவர்களைக் காட்டிலும் சாமர்த்தியமாகவும், நன்றாகவும், முழுமையாகவும், எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கலாம்.

வயதாகும் போது ஞாபகசக்தி குறைந்து போவதாகக் கூறுகிறார்கள்.

ஞாபகசக்தி என்பது நாம் ஒரு விடயத்தில் மேற்கொள்ளும் உற்சாகத்தைப் பொறுத்தது. இது நாமே வளர்த்துக் கொள்ளும் ஒரு மனப்பக்குவம் ஆகும். ஆகையால் வயதான பின்பும் கூட, தேவையான அளவு ஞாபக சக்தியை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளமுடியும்.

வயது முதிர்ந்த பிறகு அனுபவம் காரணமாக எந்தவொரு விடயத்திலும் நல்ல முடிவை எடுக்கக் கூடிய திறமை ஒருவருக்கு ஏற்படுகிறது. தன்னடக்கம், சமநிலையில் பழகக்கூடிய பக்குவம், தாராளமான சுபாவம் ஆகியவை இந்த வயதில் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய நல்ல பலன்கள் ஆகும்.

உடல்நலம் நன்றாக இருந்தால் - சோர்வு, எரிச்சல், கோபம் ஆகியவை ஏற்பட வேண்டிய அவசியமில்லை. சுமுகமாகவும், உற்சாகமாகவும், எல்லோருடனும் கலந்து பழக முடியும்.

குழந்தைகள் எம்மைவிட வயதில் மிகவும் குறைந்தவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அதற்கேற்ப விட்டுக் கொடுத்துப் பழகும் மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குழந்தைகளுக்குச் சிறு உதவியைச் செய்வது வயதானவர்களை - இளையவர்கள் நேசிக்கச் செய்ய உதவும்.

மனத்தளவில் தொடர்ந்து உற்சாகமும், அமைதியும் கிடைக்க நல்ல பொழுது போக்குகளை மேற்கொள்வது மிகவும் அவசியம். நண்பர்களைச் சந்திப்பதும், புத்தகங்களைப் படிப்பதும், இசையை ரசிப்பதும் நன்மை தரும்.

எந்தவொரு நேரத்தையும் சலிப்பில்லாமல் செய்துகொள்ள இந்த நேரத்தில் இதைத்தான் செய்யவேண்டும் என்று இல்லாமல், அவ்வப்போது மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அது உங்களுக்கு ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கமுடியும்.



இயற்கையின் சுபாவமே முதிர்ச்சி அடையும்போதுதான் வாழ்வில் இனிமை கூடுதலாக இருக்கும் என்பது உண்மைதான். பழம் கனியும் போதுதான் நல்ல சுவையாக இருக்கிறது. பால் சுருங்கி வற்றும் போதுதான் சுவை கூடுதலாக இருக்கிறது. கதிர் ஒளி மாலையில் சுருங்கும் போதுதான் அதில் பொன் வண்ணமான நிறங்கள் தோன்றுகின்றன.

மனித வாழ்க்கையும் அப்படிப்பட்டதே. மனப்பக்குவம் அடைவதற்கும், மனித வாழ்க்கையின் பயனை முழுமையாக அடைவதற்கும், முதுமையை எளிதாக ஏற்க பழகிக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் வெற்றி அதில்தான் அடங்கியிருக்கிறது.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

எனக்கு நல்ல பசி. நேற்று இரவு ஒன்றும் சாப்பிடவில்லை. வீட்டில் எல்லோரும் சாப்பிட்டார்கள். யாரோ சமைத்துக் கொண்டு வந்த சாப்பாடு! வகைவகையாக வந்தது. என்னிடம் வந்து பலர் சாப்பிடவரச் சொன்னார்கள்.

நான் போகவில்லை. 'பிடிவாதம் பிடிக்கிறாள்' விடுங்கோ, விட்டுவிடுங்கோ' என்னுடைய உறவினர் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவரை நிமிர்ந்து பார்த்தேன். நல்லகறுப்பு, செம்பட்டைத்தலை, நெற்றியில் சந்தனப் பொட்டு, கருங்கல்லில் காகம் எச்சம் போட்டாற்போல பளிச்சென்று தெரிந்தது! அவர் முகத்தை விளக்குப் பிடித்துத் தான் பார்க்கவேண்டும். நான் ஒன்றும் பேசவில்லை.

ஆனால், அவர் தொடர்ந்து சொன்னது... என்னைத் துடிக்க வைத்தது. தெருவில நிண்டதுகளைக் கொண்டு வந்து நடு வீட்டுக்கை வைச்சால் இப்படித்தான்!... நான் எழும்பினன் .

அவரை நோக்கி ஓரடி எடுத்து வைத்தேன்... அவரும் என்னைப் பார்த்துப் பரதேசி நாய்க்குக் கோபம் வருகுதோ!... என்று கேட்டு முடிய முன்னர் - என் கீரிப்பற்கள் அவருடைய கையைக் கடித்துக் குதற அவர் வேதனை பொறுக்கமுடியாமல் ஓலமிட, நான் காற்றாய்ப் பறந்து வீட்டை விட்டு வெளியேறி தெருவில் தலை தெறிக்க ஓடினன்.

என் வாயில் அவர் குருதி வாடை. கோயிலடிக் கிணற்றுத் தொட்டியில் நிரம்பியிருந்த நீருள் என் தலையை அமுக்கினேன். என் வெறி மெல்லத் தணியத் தொடங்கியது... இரவு கோயில் வெளி மண்டபத்தில் படுத்து அழுதுகொண்டே நித்திரையாகி விட்டன்....

மறுநாட்காலை நான் கண் விழித்தபோது சூரிய வெளிச்சம்! வெளிமண்டபத்துள் வந்து விட்டன். கண்களைக் கழுவ மீண்டும் கிணற்றடிக்குச் சென்றன்.

கிணற்றடியில் ஒரு சிறுமி தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள்! அவள் என்னைக் கண்டதும் தலையைச் சாய்த்து ஒரு காக்கை போலப் பார்த்தாள். நான் கொஞ்சம் கிட்டப் போனன். அவள் என் சட்டையை நோக்கிக் கையைக் காட்டினாள்... நானும் அப்போது தான் குனிந்து என் சட்டையைப் பார்த்தன்.

இரத்தக்கறை... இதை அவளிடம் எப்படிச் சொல்வது ஆனால், அவள் அதற்கு மேல் என்னிடம் ஒன்றும் பேசவில்லை. நான் தண்ணீரை அள்ளி முகம் கழுவினன். இரத்தக் கறையும் கழுவினன்.

அது முழுவதும் போகவில்லை. நான் கோயில் வெளிவீதியிலே நடந்து, மேற்கேயிருந்த ஆலமரத்தடியில் வேரில் குந்தினேன். அந்தச் சிறுமியும் என்னை மீண்டும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனாள்.

என்னைப் பற்றி யாருக்குமே தெரியாது. என்னை வளர்த்த தாய் மூன்று நாட்களுக்கு முன் காலமாகிவிட்டாள்.

அவளுக்கு வயது 60 ஆனால், அவள் தோற்றம் அப்படியில்லை. இளமையாக என் கண்ணுக்குத் தெரிந்தாள். அவளிடம் நான் வந்தபோது எனக்கு வயது 5. எனவே அவளை நான் அம்மா என்று அழைக்கவில்லை.

பெரியம்மா என்றுதான் சொல்லுவேன்.. இப்போது எனக்குப் 10 வயது. ஆண்டு ஐந்து படிக்கிறேன். பாடசாலை, அருகில் இருந்ததால் நடந்து போவேன்.



பெரியம்மா என்னில் மிகுந்த பற்று வைத்திருந்தாள். அவளுக்கு ஏராளமான சொதது இருந்தது. பெரிய வீடு தன்னுடைய 'சீதனவீடு' என்று சொல்வாள். எனக்கு அந்த வீட்டைச் சீதனமாகத் தருவேன் என்று சொன்னபோது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. சீதனம் எண்டால் என்ன? இந்தக் கேள்வியை யாரிடம் கேட்டால் விடை கிடைக்கும்? எனக்கு இதே எண்ணம் தான்.

ஒரு நாள்... பாடசாலையில் என் தோழி விமலாவிடம் கேட்டேன். அவளுக்கும் விடை தெரியவில்லை.

போன கிழமை தான் பெரியம்மாவிடம் கேட்டேன். அவவுக்கு வியப்பாக இருந்தது. என்றாலும் அதற்கு விடை சொல்ல வெளிக்கிட்ட நேரம்... 'நெஞ்சில் வலிக்கிறது!' என்று சொன்னா. நான் ஓடிப்போய் சுடுதண்ணிப் போத்தலில் இருந்த தண்ணியைக் கொண்டு வந்து குடுப்பம் என நினைத்துக் கொண்டு குசினியுக்கை ஓடிப்போனேன் சுடுதண்ணிப் போத்தலை எடுக்க அது கை தவறி டங்!.. எண்டு கீழே விழுந்தது.

எடுத்துத் திறந்து பார்த்தன். உடைஞ்சு போச்சு, எனக்கு அடுப்பு மூட்டத் தெரியாது [illegible] பெரியம்மாவிடம் கேட்பம் எண்டு திரும்பி வந்தன். பெரியம்மா கதிரையிலை தலை சாய்ந்துபோய்க் கிடந்தா.

நான் அவவைத் தட்டி எழுப்பினன். அவ எழும்பவில்லை. நான் பயத்திலை ஐயோ! பெரியம்மா!... எண்டு குழறிக் கொண்டு தோட்டத்துள் ஓடிப்போய் அங்கை வேலை செய்து கொண்டு இருந்த ஆட்களட்டைச் சொன்னன்.

அவையளும் ஓடிவந்து பார்த்துப் போட்டு அவ செத்துப்போனா எண்டு சொல்லிச் சினம்,.. பிறகு பெரியம்மாவின்ரை சொந்தக்காரர் எல்லாரும் வந்தினம்... நான் ஒரு மூலையில் இருந்து அழுது கொண்டிருந்தன்.

மரணச்சடங்கு எல்லாம் பெரிய கலியாணவீடு மாதிரி நடந்தது. 'பெரியப்பா' எண்டு ஒருத்தர் வந்தார். அவர்தான் கொள்ளியும் வைச்சவர். என்னை எல்லோரும் விநோதமாகப் பார்த்தினம்.

ஒரு கவலையும் இல்லாமல் சாப்பிட்டுச் சந்தோஷமாக இருந்தினம். 'பெரியப்பா' எண்டவர் என்னுடன் ஒன்றும் பேசவில்லை. ஆனால், என்ரை கறுப்பு மாமா்வோடை நிறையக் கதைச்சார்.

பிறகு என்னட்டை வந்து - 'உறுதி எங்கையடி' எண்டு கேட்டார். நான் தெரியாது எண்டு சொன்னன்! அவர் மீண்டும் உறுக்கிக் கேட்டார். நான் பேசாமல் இருந்தன்.

அடுத்த நாளும் அவர் உறுதி எங்கை எண்டு கேட்டார். நான் தெரியாது எண்டு சொல்ல, என் கன்னத்தில் அடித்தார். நான் ஓடிப்போய் ஒரு அறையுக்குள்ளை பூட்டிப்போட்டு நிண்டன். எல்லோரும் வந்து தட்டிப் பார்த்தினம் நான் திறக்க வில்லை. பேசாமல் மூலையில் படுத்துவிட்டன்.

மறுநாள் காலை கத வைத்திறக்க முன்பு, அறையை நோட்டம் விட்டன். அது பெரியம்மா தேவையில்லாத பொருட்களைப் போட்டு வைக்கிற அறை.

ஒரு சின்னப் பெட்டி திறந்தபடி கிடந்தது. அதுக் குள்ளை ஒரு கடிதம். எடுத்துப் படிச்சன். பெரியம்மா தான் எழுதியிருந்தாள்.

அதிலை சீதன உறுதி இருக்கிற இடம் எழுதப்பட்டு இருந்தது. மேலும் இந்த வீடு என் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டிருப்பதாகவும், அந்தப் பதிவாளருடைய பெயர், விலாசம் எல்லாம் எழுதப்பட்டிருந்தது. நான் அதை என் சட்டைப் பையுள் பத்திரப்படுத்தி விட்டன்.

இப்போதுதான் அது நினைவுக்கு வந்தது. நிமிர்ந்து மேலே பார்த்தன். சூரியஒளி இலைகளுக்கூடாகத் தெரிந்தது. பெரியம்மா மேலே இருந்து கைகாட்டுவதுபோல இருந்தது. இனிமேல் நான் யாரிடம் போவது?

என் மனம் அழுதது.. கோயில் மண்டபத்துக்கு வந்தன். கண்ணை மூடி ஒரு நிமிடம் கடவுளை வணங்கினன்.

மீண்டும் கண்னைத் திறந்தன். பக்கத்தில் யாரோ வந்து நிற்கிறார்கள். அறியாத முகம். கொஞ்சம் அச்சமாக இருந்தது. வந்து நிற்பது ஒரு பெண். நானும் பெண் என்பதால் பயப்படத் தேவையில்லை.

அவ தன்னைத் தானே அறிமுகம் செய்தா 'நான் உன் பெரியம்மாவின் சிநேகிதி. உன்னை என்னிடம் தந்துவிட்டுப் போய்விட்டாள்.

இதோ அவள் அனுப்பிய கடிதமும், உறுதியும் அவ எடுத்துக் காட்டியபோது நானும் என் சட்டைப் பையுள் இருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தன்.

அவ வாங்கிப் படித்துவிட்டு, என்னிடம் தந்தபோது நான் எனக்குள் முடிவு செய்து விட்டன்.

என் முடிவு அவவுக்கு விளங்கி விட்டது. பரிவுடன் என் கையைப் பற்றிக் கொண்டார்.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

## படுக்கப்போகும் முன்

### குழந்தைகளிடம் மனம் விட்டுப் பேசுங்கள்



குழந்தை படுக்கைக்குப் போவதற்கு முன்னர் மனம்விட்டு அன்பாகப் பேசுங்கள். நல்லதை எண்ணிப் பார்க்கப் பழக்குங்கள். கதைகள், புத்தகங்களிலுள்ள கதைகளைக் கூறலாம் அல்லது புராணக் கதைகள் சொல்லலாம். புத்தகம் பார்த்து கதை சொல்வது ஒரு நாள் என்றால், இன்னொரு நாள் மரபுக் கதை சொல்லுங்கள். இது உங்கள் குழந்தையை உணர்வு பூர்வமாக உங்களுடன் இணைவதற்கு உதவிபுரியும்.

கதை சொல்லும் தாத்தா, பாட்டியை - அப்பா, அம்மாவைக் குழந்தைகள் விரும்புவதற்கு இதுவே காரணம்.

வாழ்க்கையில் நடந்த நல்ல நிகழ்ச்சிகளை, பெற்றோரின் தாத்தா, பாட்டியின் வாழ்க்கையை, உழைப்பின் பெருமையைப் பற்றியெல்லாம் சொல்லலாம். இவை குழந்தைகளுக்குத் தங்கள் குடும்பத்தினர் மீதும், முன்னோர்கள் மீதும் மதிப்பையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்தும்.

வளர்ந்த பிள்ளைகளிடம் நாட்டு நடப்புகள், வீட்டுத் தேவைகள் பாடசாலை நிகழ்ச்சிகள் பற்றிப் பேசலாம். இது பெற்றோருக்கும் வளர்ந்த பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள நெருக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

## தெரிந்து கொள்ளுங்கள்

- ☆ கண்ணாடியைச் சுத்தம் செய்யும்போது நீரில் கொஞ்சம் விநாகிரியைக் கலந்து சுத்தம் செய்தால் கண்ணாடி தூய்மை பெறும்.
- ☆ சிறிதளவு மண்ணெண்ணெய் தோய்த்த துணி கொண்டு மரத் தளபாடங்களை சுத்தம் செய்வதால், மரத் தளபாடம் பளபளப்பாவதுடன், அதிலுள்ள சிறு பூச்சிகளும் அழிந்துவிடும்.
- ☆ அவரைக்காய் சமைக்கும் போது அதனுடன் வாழைப்பழ சிறு துண்டை சேர்த்தால், அவரைக்காய்கறி மென்மையாக இருக்கும்.
- ☆ சலவைத்தூளுடன் சிறிது உப்புத் தூளையும் சேர்த்து பாத்திரங்களைச் சுத்தம் செய்வதால் அவற்றின் பளபளப்பு அதிகமாகும்.
- ☆ குளிர்சாதனப் பெட்டியினுள் எலுமிச்சம் பழத்தின் தோலை வைத்து மூடினால், அதனுள் காணப்படும் துர்வாடைநீங்கும்.
- ☆ உணவுப் பொருட்களைப் பொதுவாக மூடியே சமைக்க வேண்டும். ஆனால், மரவள்ளிக் கிழங்கு கீரை என்பவற்றைத் திறந்தே சமைக்க வேண்டும்.
- ☆ பூச்சாடிகளில் வைக்கும் பூக்கள் வாடாமல் இருப்பதற்கு, சாடிக்குள் இருக்கும் நீருடன் உப்புக் கலந்து வைத்தால், பூக்கள் வாடாமல் நல்ல வாசத்துடன் காணப்படும்.
- ☆ பல்லிகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த முட்டைக் கோதுகளைப் பல்லி காணப்படும் இடங்களில் போட்டு விடுவதால் பல்லிகள் வரவே வராது.
- ☆ புத்தகங்களைப் பாதுகாக்க, புத்தகங்கள் உள்ள அலுமாரியில் - வசம்பு, வேப்பிலை போன்றவற்றைப் போடுவதால் - கறையான் மற்றும் பூச்சிகளின் பாதிப்பு ஏற்படாது.
- ☆ தக்காளிப் பழம் வாங்கும்போது அரைப்பழமாக வாங்கினால், இரண்டு நாட்களுக்கு வைத்துப் பாவிக்க முடியும்.
- ☆ முள்ளங்கிச் சாறுடன் மோரைக் கலந்து முகத்தில் தடவினால் கரும்புள்ளிகள், தழும்புகள் என்பன மறையும்.

## நிகொட் நிறுவனத்தால்

# எழுபது லட்சம் ரூபா செலவில் பாரதிபுரம் கிராமம் புனரமைப்பு

பாரதிபுரம் கிராமம் 70 லட்சம் ரூபா செலவில் நிகொட் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த 2003 ஆம் ஆண்டு நிகொட் திட்டத்தின் கீழ் இந்தக் கிராமத்தின் தேவைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் 18, 19 ஆம் திகதிகளில் இந்தப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் 35 விதவைகள் உட்பட, 318 குடும்பங்கள் பயனாளிகளாகவுள்ளனர்.

புனரமைப்புப் பணிகள் - உட்கட்டுமான திட்டத்தின் கீழ், 23 லட்சத்து 330 ரூபா செலவில் - 4 கிலோ மீற்றர் தூரமுள்ள வீதி புரமைப்பும், 7 லட்சத்து 84 ஆயிரம் ரூபா செலவில் பொது மண்டபம் ஒன்றும், 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் 5 கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன.

இத்துடன், 90 ஆயிரம் ரூபா செலவில் கிணறுகள் திருத்தப்படவுள்ளன. இதனைவிட, 3 லட்சத்து 7 ஆயிரத்து 800 ரூபா செலவில் குளங்களைப் புனரமைத்தலுக்கும், 3 லட்சத்து 6 ஆயிரம் ரூபா வருமான அதிகரிப்பு திட்டத்துக்கும், 12 லட்சத்து 40 ஆயிரம் ரூபா விவசாய செய்கைக்கும், 5 லட்சம் ரூபா கால்நடை வளர்ப்புக்கும், 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் முன்பள்ளி, பொதுமண்டபம் போன்றவற்றுக்கான தளபாடங்களை வழங்குவதற்கும், 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் பாலங்கள் புனரமைப்பு செய்வதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் புனரமைப்புப் பணிகள் யாவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதிகள்

மல்லாவி - யோகபுரம் பகுதியில் உள்ள குடியிருப்பு வீதிகள் மிக நீண்டகாலமாகக் குன்றும் குழியுமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகளூடாகச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரியவருகின்றது.

### பிக்கப் வாகனம் தடம்புரண்டதில் சாரதி காயம்

முல்லைத்தீவு - பாண்டியன்குளம் 3 ஆம் வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் பிக்கப் வாகனம் ஒன்று தடம் புரண்டது.

இந்த விபத்தில் கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்தவரான வாகனச் சாரதி அன்ரன் பரந்தாமன் (வயது 29) என்பவர் படுகாயமடைந்த நிலையில், மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




## பளை வைத்தியசாலையில்

# நிரந்தர வைத்தியர் இல்லை பொது மக்கள் பலத்த சிரமம்

பளைப் பிரதேசத்திலுள்ள அரச வைத்தியசாலைக்கு, நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமையால், அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பளைப் பிரதேசத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், பளைப் பகுதியிலுள்ள மருத்துவமனை புனரமைப்புச் செய்யப்பட்டும் - நிரந்தர வைத்தியர் இன்மை, பிரசவ விடுதி இன்மை போன்ற காரணங்களால் அந்த மக்கள் தமது மருத்துவ தேவைகளுக்கு நீண்ட தூரங்களுக்குச் செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

அத்துடன், பளை வைத்தியசாலையிலுள்ள அம்புலன்ஸ் வண்டியும் பழுதடைந்து காணப்படுவதால், அவசர நோயாளர்களைக் கொண்டு செல்வதிலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கிளிநொச்சி)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களிடையே கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டிகள் கிளிநொச்சி கல்வி வலயத்தின் தமிழ்த்துறையால் நடத்தப்படவுள்ளது.

கவிதை 300 சொற்களுக்குக் குறையாமலும் - சிறுகதை, கட்டுரை ஆகியன 500 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் பணி, சமூக எதிர்பார்ப்பு, ஆசிரியத்துவத்தின் உயர்வு, சிறபபு, பெருமை, ஆசிரியத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற எண்ணக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தலைப்புக்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை அதிபர் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார்.

# புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடங்கள் திறந்து வைப்பு

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் இரண்டு வகுப்பறைக் கட்டடங்களும் ஆய்வுகூடக் கட்டடமும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய அதிபர் ரி.கே.சிவலிங்கம் தலைமையில் இந்த திறப்புவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

பரந்தன் வீதிச் சந்தியிலிருந்து பான்ட் வாத்திய இசை சகிதம் மாணவர்கள் அணிவகுத்து நின்று, கௌரவ விருந்தினர்கள் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை புதுக்குடியிருப்பு பங்குத்தந்தையும், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய ஆசிரியர் சடாச்சரசர்மாவும் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கே.முகுந் தன் ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கட்டடத்துக்கான பெயர்க்கல்லை, முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து இரண்டாவது கட்டடத்தை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட ஆய்வு கூடத்துக்காக பொறிக்கப்பட்ட பெயர் கல்லை - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த ஆய்வுகூடத்தின் ஒரு பகுதியை தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா - நாடாவை வெட்டித் திறந்து வைக்க, அதன் மற்றைய பகுதியை முல்லை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில வரவேற்புரையை புதுக குடியிருப்பு மகா வித்தியாலய உப அதிபர் திருமதி குணசிங்கமும், ஆசியுரையை புதுக்குடியிருப்பு பங்குத்தந்தையும், கருத்து ரைகளை தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளரும் வழங்கினர்.

முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் க.குருகுலராஜன், முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், அரச அதிபர் இமெல்டா சுகுமார், கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் ஆற்றினார்.

## நிர்வாக சேவை

# பரீட்சையில் சித்தியடைந்த மூவர் மன்னார் மாவட்டத்துக்கு நியமனம்

(மன்னார்)

அண்மையில் நடாத்தப்பட்ட நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்ற மூவர் - மன்னார் மாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மடு உதவி அரச அதிபராக கி.சுரேஸ்குமாரும், மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபராக சிறிஸ்கந்தராஜாவும், மன்னார் உதவிப் பிரதேச செயலராக கேதீஸ்வரனும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மடு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய அ.மரியதாஸ் - மடு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக நியமனம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

அத்துடன், மாந்தை மேற்குப் பிரதேச செயலராகக் கடமையாற்றியவர் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

# புளியங்குளம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தரங்கு

(வவுனியா)

நேற்று முன்தினம் வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றன.

இந்த நிகழ்வில் ஒளிச்சுடரை இந்த கல்லூரி அதிபர் திருமதி கிருஸ்ண மூர்த்தி ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை புளியங்குளம் முன்னரங்க காவல் நிலையப் பொறுப்பாளர் மாறன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை வவுனியா வடக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீப் மற்றும் யோகராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

வீதி விழிப்புணர்வு கருத்துக்களை துணுக்காய் காவல் பணிமனை பொறுப்பாளர் யோகநாதன் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## வவுனியா மாவட்டத்தில்

# பிரஜா உரிமை அற்றோரை பதிவு செய்ய நடவடிக்கை

வவுனியா மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களிலும் கிராமப் பகுதிகளிலும் வாழுகின்ற இந்திய வம்சாவளியினராகிய இலங்கைப் பிரஜாவுரிமையற்றவர்களை, பிரஜைகளாகப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைய்யை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்துடன் இணைந்து மேற்கொண்டுள்ளது.

இதற்காக வவுனியா, செட்டிகுளம் ஆகிய பிரதேசங்களில் பல்வேறு இடங்களில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்திய வம்சாவளியினரான 30.10.64 தொடக்கம் இலங்கையில் நிரந்தர மாக வசிப்பவர்களும், பிரஜாவுரிமை அற்ற நிலையில் 1964 ஆம் ஆண்டு சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய கடவுச் சீட்டுப் பெற்ற பின்னரும் இலங்கையில் தொடர்ந்து வசிக்க விருப்பம் கொண்டவர்களும் இந்த நடமாடும் சேவையில் பயனடைய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் ஆரம்பமாகிய இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இச்சேவை செட்டிகுளம் பிரதேச செயலகம், வவுனியா பிரதேச செயலகம் ஆகியவற்றிலும் பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலும் நடைபெறும்.

14 ஆம் திகதி செட்டிகுளம் பிரதேச செயலகம், வவுனியா பிரதேச செயலகம் ஆகியவற்றிலும், பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலும் இந்தப் பதிவுகள் நடைபெறும்.

15 ஆம் திகதி சமளங்குளம் கிராமசேவை அலுவலகத்திலும், செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள அடப்பன்குளம் நலன்புரி நிலையம், வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலும் நடமாடும் சேவை நடைபெறும்.

16 ஆம் திகதி வீரபுரம் சனசமூக நிலையம், தரணிக்குளம் கிராம சேவை அலுவலகம், பூந்தோட்டம், சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலும் இந்த நடமாடும் சேவை நடைபெறும்.

### ஆசிரிய வாண்மை விருத்தி செயலமர்வு

மாகாண ஆசிரிய நிலையங்கள் இணைந்து நடாத்தும் ஆசிரியர் வாண்மை விருத்தி செயலமர்வு - இன்றும், நாளையும் கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 320 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும், 30 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கற்றல் செயற்பாடுகள் 10 அறிவுத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 10 விடயங்கள்மூலம் ஆசிரிய செயற்பாடுகள் விளங்கப்படுத்தப்படவுள்ளது.

# மன்னார் வைத்தியசாலையில் எக்ஸ்ரே இயந்திரம் பழுது

மன்னார் வைத்தியசாலை - பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளபோதும், அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் இருந்த எக்ஸ்ரே இயந்திரம் (படம் எடுக்கும்) கருவி பழுதடைந்து நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது.

இதனால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் - வெளியிலேயே பணம் கொடுத்து எக்ஸ்கதிர் படம் எடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இங்கு கடமையாற்றிவந்த சத்திர கிசிச்சை நிபுணர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால், நோயாளர்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (201)

# அதிபர் இன்றி இயங்கி வரும் கரிப்பட்டமுறிப்பு பாடசாலை

முல்லைத்தீவு - கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இந்தப் பாடசாலையில் தொண்டர் ஆசிரியர்கள் உட்பட 10 ஆசிரியர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கான அதிபர் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. அதிபரற்ற நிலையில் இந்தப் பாடசாலை பெரும் சிரமங்களின் மத்தியிலேயே இயங்கி வருகின்றது.

அத்துடன், இந்தப் பாடசாலையில் ஒரேயொரு நிரந்தரக் கட்டம் மட்டுமே உள்ளது. இதனால் மாணவர்கள் மரநிழலிலிருந்து கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்*
*உள்பகை உள்ளதாம் கேடு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## போரை ஆரம்பிக்க படைத்தரப்பு முயல்கிறதா ?

ஏற்கனவே பல்வேறு காரணங்களால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை நகர்வுகளின் எதிர்காலம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலைப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முகாம் மீதான சுற்றிவளைப்புத் தாக்குதலையடுத்து மேலும் கேள்விக்குறியாகியுள்ளது.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 65 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள புல்லுமலை விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதியைச் சேர்ந்த இடமாகும். இரவு 10.30 மணிக்கு இப்பிரதேசத்தினுள் ஊடுருவிய தாக்குதல் கும்பலில் இராணுவக் கொமாண்டோக்களும், கருணா குழுவைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள் எனத் தெரியவந்துள்ளது.

சுமார் 35 பேர்களைக் கொண்ட இத்தாக்குதல் குழுவினர், விடுதலைப்புலிகளின் முகாம் மீது சுற்றிவளைப்புத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்ட போது புலிகளின் கடுமையான பதில்த்தாக்குதலை எதிர் கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

புலிகளின் இத்தகைய பதிலடியின் உத்வேகத்தைத் தாங்க முடியாது பின்வாங்கிய தாக்குதல் கும்பலில் இருவர் கொல்லப்பட்டதாகவும் பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டோடிய எஞ்சிய தாக்குதல் கும்பல், அதன்பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளதான் அவர்களை யாரென இனம் காட்டியுள்ளதெனலாம்.

கொல்லப்பட்ட - காயமடைந்த தமது ஆட்களுடன் தப்பியோடிய தாக்குதல் குழுவினர் விடுதலைப்புலிகளது முகாமுக்கு சற்றுத் தூரத்தில் இருந்த 'மக்' எனப்படும் பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் அமைப்பின் அலுவலகத்திலுள் நுழைந்து மறைந்திருந்ததுடன், பின் அந்த அமைப்பின் ஊழியர்களை ஆயுத முனையில் மிரட்டி, அச்சுறுத்தி தங்களை புல்லுமலைப் பகுதியில் உள்ள தெம்பிட்டிய இராணுவ முகாமில் கொண்டு சென்று விடுமாறு கோரியுள்ளனர். மறுத்தால கொன்று விடுவோம் என்றும் எச்சரித்துள்ளனர்.

மிரட்டலுக்குப் பணிய மறுத்த ஊழியர்களை தாக்கிச் சித்திரவதை செய்ய முயன்றதையடுத்து, உயிருக்கு அஞ்சிய அவர்கள் அங்கிருந்த நிலக்கண்ணிவெடி அகற்றும் அமைப்புக்கு உரிமையான வாகனங்களில் ஏற்றிக்கொண்ட அவர்கள் குறிப்பிட்ட இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று இறக்கியுள்ளனர்.

முகாமருகே இறங்கிய அக்குழுவினர் 'மக்' நிறுவன ஊழியர்களை போகுமாறு பணித்துவிட்டு இறந்த உடல்களையும், காயமுற்றோரைம் தூக்கிக் கொண்டு முகாமிற்குள் நுழைவதை அந்த ஊழியர்கள் கண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

இந்த நிகழ்வு சில விடயங்களை தெளிவாகத் தெரிவிக்கவே செய்கிறது. ஒன்று - தாக்குதலை நடத்திய குழுவினர் வேண்டுமென்றே விடுதலைப் புலிகளுடன் சீண்டி அவர்களைப் போர்க்கோலம் கொள்ளச் செய்ய முயன்றுள்ளனர்.

தாக்குலை நடத்தியோர் இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் இருந்து மட்டுமல்ல தெம்பிட்டிய இராணுவமுகாமில் இருந்தே வந்துள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது. அதனால்தான் அவர்கள் தங்களை அந்த முகாமில் கொண்டு சென்று விடுமாறு மக் நிறுவன ஊழியர்களை மிரட்டியுள்ளார்கள்.

இராணுவ முகாமிற்கு சம்பந்தமில்லாதவர்களால், இறந்தவர்களையும் காயமுற்றோர்களையும் தூக்கிக் கொண்டு தாக்குதல் குழுவினர் அதற்குள் சென்றிருக்கவே முடியாது

இராணுவத் தரப்பு கூறுவதைப்போன்று இத்தாக்குதலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லையெனில் ஆயுதபாணிகளாக தாக்குதல் நடத்திவிட்டு வந்தோரை இராணுவ முகாமில் கைது செய்யாது விட்டதேன், அது மட்டுமல்ல தாக்குதல் நடத்த வந்த ஆயுதக்கும்பல் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இரவு நேரம் புலிகளின் பிரதேசத்துள் ஊடுருவ முயன்றவேளையில் அவர்கள் சோதனையிடாது அனுமதித்தது ஏன்? இராணுவ உதவியின்றி அவர்கள் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் வந்து தாக்குதல் நடத்துவதென்பது எந்த வகையிலும் சாத்தியமற்றவிடயமேயாகும்.

தாக்குதலை தலைமைவகித்து நடத்தியவர் கருணாகும்பலைச் சேர்ந்த பிள்ளையான் எனவும், கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அதே கும்பலைச் சேர்ந்த நகுலன் எனவும் இனங்காணப்பட்டுள்ளமையானது கருணாகும்பலுக்கும் இராணுவத்தரப்புக்குமிடையிலான உறவை உறுதி செய்வதாக உள்ளது.

இவ்வளவு ஆதார காரணங்கள் இருந்தும் புல்லுமலைத் தாக்குதலுடன் தமக்கு தொடர்பில்லை என இராணுவத்தளபதி மறுப்புத் தெரிவித்துள்ளமையானது விநோதமானதே...!

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

சமாதானத்தை நிராகரித்து எதிர்க்கும் சக்திகள் படைத்தரப்பினுள் இருக்கிறார்கள் அதுமட்டுமல்ல அத்தகைய குணாம்சம் கொண்ட வெளிச்சக்திகளுக்கு படைத் தரப்பு அனுசரணை புரிவோராகவும், ஆதரவும்பாதுகாப்பும் வழங்குவோராகவும் உள்ளனர் என்பதே அதுவாகும்.

அண்மைக்காலத்தில் நிகழ்ந்த பல சம்பவங்கள் இவற்றை மீண்டும் மீண்டும் உறுதிசெய்வதாகவே உள்ளன.

எனினும் அரசதரப்பும் படைத்தரப்பும் இவற்றை மறுத்தே வருகின்றனர்.

இத்தகைய செயற்பாடுகள் அரசின் சமாதான முயற்சிகள் மீதான சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதுடன், இத்தகைய தாக்குதல் முயற்சிகள் போர் ஒன்றை மீளவும் தொடங்க முனைப்புடன் சிந்தித்துவரும் அரசின் உள்நோக்கத்தையும் உறுதி செய்வதாகவும் உள்ளது.

## நாடும் நடப்பும்




# இளைஞர்களே சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டும்; சமூகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கவும் வேண்டும்!

## துணைவேந்தர் மோகனதாஸ்

இளம் மாணவர்களே இன்று விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்து வழிநடத்தி மக்கள் சமுதாயத்தையும் வழி நடத்தி வருகின்றார்கள். இவ்வாறே மாணவர்களும் இந்த ஒன்றியத்தின் மூலம் தமிழ் மாணவர்களைச் சீரான பாதையில் வழிநடத்த வேண்டும். இளைஞர்கள் சமுதாயத்திற்கு நல்வழி காட்டக் கூடியவர்களாகத் திகழவேண்டும் என யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

கோவில் வீதி நல்லூரில் தமிழ் மாணவர் ஒன்றியத்துக்கான பணிமனை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழீழ மாணவர் பேரவையை ஆரம்பித்து அது மாணவர்களுக்கு சிறப்பான பல பணிகளை ஆற்றி வருகின்றது. இவ்வாறே மாணவர்களுக்கு தமிழ் மாணவர் ஒன்றியமும் பல சிறப்பானபணிகளை ஆற்ற வேண்டும்.

மேலும் இந்த ஒன்றியம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு ஆலோசனை மையமாகவும் இருக்க வேண்டும். அத்துடன் அவர்களுக்குள்ள பிரச்சினைகளை ஒன்றியம் தீர்த்து வைத்தல் சிறப்பானதாகும்.

ஏனெனில், மாணவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்தால் தான் நாட்டுப் பிரச்சினை தீரும். மாணவர் பிரச்சினைகள் தீராத வரை நாட்டுப் பிரச்சினையும் தீராது.

இந்த ஒன்றியத்துக்கு தலைமையகம் ஒன்றை அமைத்து மாவட்டங்கள் தோறும் இவற்றை நிறுவி மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இந்த ஒன்றியத்தின் கிளை வவுனியாவில் திறக்கப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் பல மாணவர்கள் பல்வேறு சமுதாயப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறார்கள். இந்த சமுதாயப் பிரச்சினையில் இருந்து மாணவர்களை விடுவித்து நாம் வெற்றிகாண வேண்டும்.

நமது சமூகத்தில் இருக்கின்ற இளைஞர்கள் எம் சமுதாயத்திற்கு நல்லவழியைக் காட்ட வேண்டும். எமது சமுதாயத்தில் இருக்கிற முதியவர்கள் கூட தற்போது இளைஞர்களின் சொல்லைக் கேட்கத் தயாராக இருக்கிறார்கள்.

ஏனெனில் இளைஞர்களே தங்கள் ஆளுமை மூலம் இன்றைய விடுதலைப் போராட்டத்தையும் முன்னெடுத்தவர்கள். இதனை நான் போற்றுகின்றேன் வரவேற்கின்றேன.

இளைஞர்களே நீங்கள் சமுதாயப் பிரச்சினையை இனம் கண்டு தீர்த்து வையுங்கள். வறுமை காரணமாக கல்வி கற்க முடியாத இளைஞர்களுக்கு உதவுங்கள் எல்லா மாணவர்களையும் போல அவர்களையும் சிறப்பாக வழி நடத்திச் செல்லுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இளைஞர் யுவதிகளுக்கான தொழில்சார் பயிற்சி நெறி

(சுதுமலை)

நவோதயா துரித அபிவிருத்தித் திட்டத்தில் புதுப்பொலிவு பெறும் மானிப்பாய் மெமோறியல் நவோதயா கல்லூரியில் இந்த வருட இறுதியில் இரண்டு வருட தொழில்சார் பயிற்சி நெறி இடம் பெறவுள்ளது.

கனடா பழைய மாணவர்சங்கப் போசகர் திருமதி சுந்தரேசனால் மேற்கொள்ளப்படவுள்ள தொழில்சார் பயிற்சியின் பின்னர் இது தொடர்பான மூன்று வருட கற்கை நெறியாக லண்டன் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைப் பயின்று பட்டம் பெறவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞர்,யுவதிகளுக்கான இப்பயிற்சி நெறியானது முழுவதும் இலவசமாக மேற்கொள்ளப்படுவதுடன், பயிற்சியைப் பெற்று இரண்டு வருட முடிவில் வெளியேறும் ஒவ்வொரு மாணவனும் பூரண தொழில்சார் அறிவைப் பெறக்கூடிய வகையில் நவீன வசதிகளும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)

# இளம் குடும்பப் பெண்ணைக் காணவில்லையென முறைப்பாடு

குடும்பப் பெண் ஒருவரைக் காணவில்லையெனத் தெரிவித்து யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைபபாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கரப்பிள்ளை வீதி, நான்காம் கட்டை, ஆனைக்கோட்டை எனும் முகவரியைச் சேர்ந்த செல்வேஸ்வரன் பிறேமினி (வயது 30) என்பவரே கடந்த மாதம் 30 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்து அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

இவர் காணாமற் போய் இரண்டு நாட்களின் பின்னர் அவரது வீட்டிற்கு அருகில் உள்ள தொலைத் தொடர்பு நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தான் எந்தவித பிரச்சினையும் இன்றி இருப்பதாகவும் தன்னைத் தேட வேண்டாம் என்று தெரிவித்ததாகவும, தொலைத் தொடர்புபபணிப்பாளர் தெரிவித்ததாகவும் அந்த முறைப்பாடடில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமற் போயுள்ள பெண்ணின் கணவன் மத்திய கிழக்கு நாடொன்றில் பணியாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (ப்)

# இரண்டாயிரம் அடையாள அட்டைகள் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் தேங்கிக் கிடந்த அடையாள அட்டைகளில் சுமார் இரண்டாயிரம் வரையிலானவை கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவில் ஒரு வருடமாகத் தேங்கிக்கிடந்த அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் பொது மக்கள் அடைந்து வந்த குழப்பநிலை தீர்ந்துள்ளதாகவும் அங்கு தேங்கிக் கிடந்ததாகக் கருதப்பட்ட அனைத்து அடையாள அட்டைகளுமே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கடந்த வாரமும் யாழ்ப்பாண மக்களுக்கு சொந்தமான 890 அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ப)

# வடக்குக் கிழக்கிலுள்ள விகாரைகள் உரிய வழியில் பாதுகாக்கப்படும்

## கலாசார அமைச்சர் தெரிவிப்பு

வடக்குக் கிழக்கிலுள்ள பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த சின்னங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படும், என்று கலாசார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஜாதிகஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறையில் பௌத்த சின்னங்கள் வேற்றுமதத்தவர்களால் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் உள்ள ஏனைய கலாசார மையங்களும் உயர்பாதுகாப்புக்களுடன் செயற்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(01)

# இவ்வார பலன்கள்
## 10-09-2004 16-09-2004

| | ராகு | | |
|---|---|---|---|
| யுரே | 12 பி.ப 3.41 சிங்-சந்<br>14 இரவு 11.49 கன்-சந் | | சுக், சந் சனி |
| நெப் | 16 பி.ப. 5.11 கன்-சூரி<br>16 பி.இ 5.42 துல-சந் | | சூ, செவ் புத |
| | | கேது | குரு |

### மேடம
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு பொதுவாக நற்பலனுண்டு. குடும்பத்தில் ஒற்றுமையும். செல்வாக்கும் சிறப்பாக அமையும். வருவாய் திருப்திகரமாக இருக்கும். அந்தஸ்து உயரும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. பெரியவர்களின் உதவி கிட்டும். இனபந்துக்களின் உதவி உண்டு. சிலருக்கு திருமண நிகழ்வுகள் கைகூடும். அடிக்கடி பிரயாணம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளினால் நற்பெயர் கிட்டும். கீழ் உத்தியோகத்தர் பணிந்து நடப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும் வருவாய் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி அடைவர். சிலருக்கு கல்வி மூலம் வெளிநாட்டுப் பயணம் கிட்டும்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம்பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குருவின் பார்வை சிறப்பாக இருக்கும். இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். உறவினர்களிடமிருந்து நற்பலன் கிட்டும். எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். பணப்புழக்கம் திருப்தி தரும். தேகாரோக்கியமும் நன்றாக இருக்கும். விவாக முயற்சிகள் கைகூடி நல்வாழ்க்கை அமையும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் முன்னேற்றம் கிட்டும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். உத்தியோகத்தர்களுக்கு தமது தொழிலை திறம்பட ஆற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் கிட்டும். சகதொழிலாளர்களின் உதவி உண்டு. மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். சிலருக்கு தொழில் வாய்ப்பு கிட்டும்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*



மிதுனராசிக்காரருக்கு குடும்பத்தில் அடிக்கடி மனவேதனை தரக்கூடிய சம்பவங்கள் ஏற்படும். எடுத்த கருமங்கள் தடைப்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். பணக் கஷ்டமும் ஏற்பட இடமுண்டு. தேகத்தில் சிறு வியாதிகள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு அரசியல் தொல்லைகள் இருக்கும். ஒழுங்காகப் பணியாற்ற முடியாமலிருக்கும் பொதுவிடயங்களில் குற்றம் காணப்படுவீர்கள். மாணவர்கள் அதிக சிரத்தையும், ஊக்கமும் காட்ட வேண்டிய காலம்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்கு குடும்பத்தில் மனைவி மக்களுடன் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு மறையும். பணக்கஷ்டம் இருந்தாலும் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். இனபந்துக்களால் உதவி உண்டு. பெண்கள் ஆடம்பரங்களைக் குறைக்க வேண்டும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். வர்த்தகர்கள் வியாபாரத்தில் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. கொடுக்கல், வாங்கல்களில் நிதானம் தேவை. புதிய முதலீடுகளைப் பொறுத்துச் செய்யலாம். உத்தியோகத்தர்களுக்கு கடமை உணர்வு அவசியம். அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் நடந்து கொள்வது நன்று. எதிலும் எச்சரிக்கை தேவை. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடைகள் ஏற்படும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் ஜெனனமானவர்களுக்கு குடும்ப வாழ்க்கை சுமுகமாக இருக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். பணவரவு திருப்திகரமாக அமையும். பிறநாட்டிலிருந்து பண உதவி கிடைக்கலாம். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நற்பெயர் கிட்டும். சகதொழிலாளர்களின் உதவி கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். வெளிநாட்டுப் பொருட்களை விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். ஆசிரியர்களின் உதவி உண்டு.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியினருக்கு குடும்பத்தில் இடையிடையே தகராறுகள் ஏற்படலாம். இனசனத்தால் சில குழப்பங்கள் தோன்றும். எடுத்த கருமங்கள் செயற்படுத்துவதில் தடை தாமதங்கள் ஏற்படும். பணவருவாய் மட்டாகவே கிடைக்கும். எதற்கும் தெய்வ நம்பிக்கை அவசியம். திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்கள் பல நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அதிகாரிகள் குற்றம் காண்பர். வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கைகள் நட்டத்தை ஏற்படுத்தக் கூடும். முதலீடுகள் தேங்கப் பார்க்கும். அவதானமாகச் செயற்படவும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். முயற்சி தேவை.

### துலாம்
*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



துலாராசிக்காரருக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும். புத்திரர்கள் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்வர். உறவினர்களின் உதவி உண்டு. வெளிநாட்டுப் பொருள் வரவு ஏற்பட இடமுண்டு. சில சந்தர்ப்பங்களில் தேகசுகம் பாதிக்கப்படலாம். எனினும் பெரிதாக எதுவும் ஏற்படுவதற்கில்லை. திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் நல்ல முடிவைத் தரும். வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கைகள் சிறப்படையும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகமாகும். உத்தியோகத்தர்களுக்கு தமது கோரிக்கைகள் நிறைவேறும். பணியாட்கள் உதவிபுரிவர். அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்கள் நடக்கும். மன அமைதி குன்றும் பணவருவாயும். செலவும் சரியாக இருக்கும். எடுத்த கருமங்கள் தாமதத்தின் பின்பே நிறைவேறும். பிரயாணங்களில் சிரமங்கள் தோன்றும். தேகாரோக்கியத்தைப் பற்றி கவனம் செலுத்தவும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் லாபம் குறைவாகவே இருக்கும். புடவை வியாபாரம் செய்வோர் கூடிய லாபம் காண்பர். திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் அவதானமாக இருக்க வேண்டும். வீண்வம்புகள் ஏற்படலாம். சக தொழிலாளர்களை அணைத்து நடப்பது நன்று. மாணவர்கள் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியினருக்கு குடும்ப வாழ்க்கை திருப்தியாக இருக்கும். மனநிம்மதியுடன் காணப்படுவர். தொடங்கும் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். பணவருவாய் அதிகரிக்கும். இல்லத்தில் சுப கருமங்கள் நடைபெறலாம். உடல் நலம் சிறப்பாக இருக்கும் புத்திரர்களால் மகிழ்ச்சியும் நற்பெயரும் கிட்டும். திருமணப் பேச்சுக்கள் மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு சகாக்கள் எல்லா வழியிலும் உதவுவர். சிலருக்கு வசதியான இடமாற்றங்கள். தொழில் உயர்வு கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். நிறைந்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு, சித்தி உண்டு.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் காணும். மக்களால் பொறுப்புக்களும், மனத் தாக்கங்களும் ஏற்படலாகும். இடையிடையே தேகசுகக்குறைவு காணும். அயலவர்களாலும், சகோதரர்களாலும் உதவி உண்டு. பண வருவாய் சுமாராகவே இருக்கும். விவாகப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்ச்சிகள் எதிர்பார்க்க முடியாது. கண்ணியமாகக் கடமை செய்தால் நற்பலனுண்டு. வர்த்தகர்களுக்கு பெரிதாக லாபம் கிடையாது. முயற்சிக்கேற்ப பலன் கிட்டும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் அக்கறை எடுத்தாலே வெற்றியளிக்கும்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினருக்கு குடும்பத்தில் அடிக்கடி சண்டை, சச்சரவுகள் தோன்றும். மன நிம்மதி குறையும். களத்திர சுகம் குறைவாகவே இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேகாரோககியத்தில் எச்சரிக்கை தேவை. பிரயாணங்களிலும் அவதானம் தேவை. திருமணப் பேச்சுக்கள் தடைப்படும். உத்தியோகத்தர்களுக்கு தமது கோரிக்கைகள் நிறைவேறாது. அதிகாரிகள் கடினமாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் லாபம் குறைவாகவே இருக்கும். இரும்பு வியாபாரிகள் கூடிய லாபம் பெறுவர். வங்கி உதவிகள் தடைப்படும். மாணவர்களுக்கு ஞாபகசக்தி குறையும். விளையாட்டில் அதிக நாட்டம் இருக்கும்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரருக்கு குடும்பத்தில் அதிக நற்பலன் கிட்டும். நற்காரிய சிந்தனைகள் அதிகரிக்கும், பணவசதிகள் பெருகும். அயலவர்களின் உதவி உண்டு. தேகநிலை சிறப்பாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் காதல் விவகாரங்கள் வெற்றிபெறும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். நிறைந்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. உத்தியோகத்தர்களுக்கு கோரிக்கைகள் நிறைவு பெறும். சிலருக்கு உயர்ச்சி வசதியான இடமாற்றங்கள் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமடைய வாய்ப்புகள் உண்டு. சிலருக்கு தொழில் வாய்ப்பு கிட்டும்.

பறை... - இ.நவகேதீஸ்வரன்

# சாதீயமும் பறைமேளக்கலையும்



தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம், இன விடுதலைக்கான போராட்டம் மட்டுமன்றி, சமூக விடுதலைக்கான, சமூக மாற்றத்துக்கான இலட்சியங்களையும், தன்னகத்தே கொண்டுள்ளது. போராட்டத்தின் சமகாலத்திலேயே பிரதேசவாதம், சாதீயம், மதவாதம் பற்றிய சலசலப்புக்கள் தோன்றுகின்றன. இந்தச் சலசலப்புக்கள் தமிழ்த் தேசியத்தைப் பலவீனப் படுத்திவிடக் கூடாது என்பது தேசிய ஆர்வலர்களது அக்கறையாகும். இந்தச் சலசலப்புக்களில் சில பூதாகாரமாக பேசப்படுகின்றன. சிலசமூகத்தின் சில மட்டங்களில் மட்டும் பேசப்பட்டு அடங்கிவிடுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை கிராமத்தில் இளந்தலை முறையினர் பறை மேளக் கலையை தடை செய்ததுடன், துண்டுப் பிரசுரமும் வெளியிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக முதலில் மூன்றாவது கண் சஞ்சிகையும், புதிய பூமி, வெள்ளிநாதம் (16-07-2004) பத்திரிகைகளில் வாசகர்களால் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன. கவிஞர் தாகூர் 'பெயர் அறியப்படாத மக்கள் கூட்டத்தைக் காலந்தோறும் நாகரீக சமுதாயங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன' என்று கூறும் அவர் 'இந்தக் கூட்டமானது விளக்குத் தண்டைப் போன்று நாகரீக விளக்கத்தைத் தன் தலையில் சுமந்து கொண்டிருக்கிறது. விளக்கிலிருந்து கசிகின்ற எண்ணெயானது விளக்கைச் சுமப்பவர் மீது கசிந்து கொண்டிருக்க, மேல் நிலை மக்கள் விளக்கின் ஒளியைப் பெறுகின்றனர் என்று குறிப்பிடுவார். இவ்வாறே பறைமேளக் கலைஞர்கள் சமூகமும் மேல்நிலை மக்களுக்கு பாரம்பரிய கலையை வழங்கும் விளக்குத் தண்டாக விளங்கினார்கள். விளங்குகின்றார்கள். இந்தச் சமூகத்தவர் தமிழர் சமூகத்தின் பஞ்சமர்களில் ஒரு பகுதியாக விளங்குகின்றார்கள். பறைமேளக் கலைஞர்களுக்கு சமூக அந்தஸ்தும் வழங்கப்படுவதில்லை. சமூகத்தில் வளர்ச்சியடையாத பிரிவினராக இவர்கள் உள்ளனர். சமூக மாற்றத்தின் காரணமாக இளந்தலை முறையினர் இந்தக் கலையை புறந்தள்ளத் தலைப்பட்டுள்ளனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் தமக்கான சமூக அந்தஸது கிடைக்கவில்லை என்பதாகும். தமிழர் பாரம்பரிய கலையான பறைமேளக் கலையை வளர்க்க வேண்டுமாயின், அந்தக் கலைக்கு சமூக அந்தஸ்தும் வழங்கப்பட வேண்டும். சமூகச் சிந்தனைகள் மாற்றமடைய வேண்டும் பாரம்பரிய கலையை ஓர் சமூகத்திற்குரிய கலையாக ஒதுக்கிவிடாது. தமிழர் தேசிய கலை வடிவாக அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும்.

இந்தநிலையில் இந்தச் சமூகத்தவர்கள் தமது மேலெழுந்த வாரியான அடையாளத்தைக் கைவிடல், துறத்தல் என்பது உண்மைச் சாதியின் அடையாளத்தை இல்லாது ஒழித்து, சமத்துவ நிலையை உருவாக்கிவிடும் என்பது குழந்தைத்தனமான எண்ணம் என்பதிலும் தவறில்லை. இத்தகைய மேலெழுந்த வாரியான அடையாளங்களைக் கைவிடல் என்பது சமூகங்களில் இடம்பெறுகின்றது. தமிழ் நாட்டில் பள்ளர் சமூகத்தவர்கள் தமது சாதிப் பெயரைத் துறந்து, தேவேந்திர வேளாளர்களாகவும், ஈழத்தில் நட்டுவர் இசை வேளாளர்களாகவும், பறையர்கள். அருந்ததியர் எனவும் இனங்காட்டத் தலைப்பட்டுள்ளனர். சாதி பற்றிய கருத்து நிலைப் பொருளாதாரம், கல்வி நிலையிலேயே தங்கியுள்ளது. பறைமேளக் கலையை தமிழரின் தொன்மையான பாரம்பரியக கலையாக வளர்த்தெடுப்பதுடன், அந்தச் சமூகத்தவர்களுக்கான சமூக அங்கீகாரத்தை வழங்குவதும் தமிழ் தேசிய சமூகத்தின் எதிர்காலவியல் சிந்தனையாக அமைய வேண்டும்.

## மன்னார் குறுக்குப்பாட்டு கடலில் இரு படகுகள் தீப்பற்றி எரிந்தது

மன்னார் குறுக்குப் பாட்டுப் கடலில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் 500 இற்கு மேற்பட்ட இந்திய மீன் பிடிப்படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, திடீரென இரு படகுகள் தீப்பற்றி எரிந்தன.

இந்தச் சம்பவத்தில் ஒரு படகு எரிந்து நீரில் மூழ்கியது. மற்றைய படகினை இலங்கை கடற்படையினர் கட்டி இழுத்து வந்து பின்னர் கடற்கரைப்பகுதியில் சேர்த்துள்ளன.

மேலும் எரிந்த படகில் இருந்த இந்திய மீனவர்கள் தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்ததென்பது இதுவரை தெரியவரவில்லை.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

20. யா/மா/ 767 திரு. செல்லப்பா கந்தையா
21. யா/மா/ 822 திருமதி. புஸ்பராணி பூபாலசிங்கம்
22. யா/மா/ 838 திரு. தம்பிமுத்து கந்தையா
23. யா/மா/ 876 திருமதி. லீலா சிவராசா
24. யா/மா/ 914 திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம்
25. யா/மா/ 931 திரு. முத்துத்தம்பி இராமநாதன்
26. யா/மா/ 956 திரு. சுப்பையா முருகேசபிள்ளை
27. யா/மா/ 966 திரு. தம்பு செல்லையா
28. யா/மா/ 968 திருமதி. சிவபாக்கியம் சுப்பிரமணியம்
29. யா/மா/ 972 திருமதி. தனேஸ்வரி செல்வராசா
30. யா/மா/ 1034 திருமதி. லோகேஸ்வரி ரவீந்திரக்குமார்
31. யா/மா/ 1150 திரு. அரியகுட்டி சௌந்தரராஜா
32. யா/மா/ 1268 திருமதி. லோகநாயகி பாலசுப்பிரமணியம்
33. யா/மா/ 1299 திரு. செல்லப்பா பொன்னையா
34. யா/மா/ 1368 திரு. கதிரேசு சண்முகம்
35. யா/மா/ 1409 திருமதி. விஜயலட்சுமி கனகசபை
36. யா/மா/ 1461 திரு. தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம்
37. யா/மா/ 1468 திரு. யோசெப் மரியநாதர்
38. யா/மா/ 1479 திரு. சூசைப்பிள்ளை பாக்கியநாதர்
39. யா/மா/ 1510 திரு. மாசிலாமணி இராசையா
40. யா/மா/ 1530 திரு. த.ஆறுமுகம் சங்கரப்பிள்ளை
41. யா/மா/ 1659 திரு. அருளப்பு செபஸ்ரி
42. யா/மா/ 1694 திரு. தீத்துஸ் அந்தோனிப்பிள்ளை
43. யா/மா/ 1723 திரு. மூத்தான் கதிரேசன்
44. யா/மா/ 1755 திரு. மயில்வாகனம் சுப்பிரமணியம்
45. யா/மா/ 1759 திரு. சுப்பிரமணியம் செல்வரெட்ணம்
46. யா/மா/ 1772 திரு. முத்துராசா அரியரத்தினம்
47. யா/மா/ 1781 திரு. கதிரவேலு குழந்தைவேலு
48. யா/மா/ 1836 திரு. நம்பியல் தேவசகாயம்
49. யா/மா/ 1854 செல்வி. தர்மசோதி கனகரத்தினம்
50. யா/மா/ 1873 திருமதி. பார்பதிப்பிள்ளை பொன்னுத்துரை
51. யா/மா/ 1875 திருமதி. புனிதவதி திருஅருள்
52. யா/மா/ 1877 திரு. ஆறுமுகம் பொன்னம்பலம்
53. யா/மா/ 1926 திருமதி. இராசமலர் சவுந்தரநாயகம்
54. யா/மா/ 1970 திருமதி. வசந்தி சிவநாதன்
55. யா/மா/ 1972 திரு. தியோகு பிறின்ஸ்பிலிப்
56. யா/மா/ 1992 திருமதி. இரத்தினம் இராசையா
57. யா/மா/ 1997 திருமதி. சின்னம்மா செல்லப்பா
58. யா/மா/ 2104 திருமதி. இராசநாயகம் அருணாசலம்
59. யா/மா/ 2108 திருமதி. பரமேஸ்வரி கமலநாதன்
60. யா/மா/ 2123 திருமதி. மல்லிகாவதி கந்தசாமி
61. யா/மா/ 2126 திரு. சண்முகம் மார்க்கண்டு
62. யா/மா/ 2143 திரு. செல்வநாயகம் செல்வதாசன்
63. யா/மா/ 2171 திரு. காத்தி நவரத்தினம்
64. யா/மா/ 2181 திருமதி. முத்துப்பிள்ளை செல்லையா
65. யா/மா/ 2200 திரு. மருதர் அரியகுட்டி
66. யா/மா/ 2230 திருமதி. அருந்ததி நடராசா
67. யா/மா/ 2256 திரு. அலேசுப்பிள்ளை யோசவ்
68. யா/மா/ 2388 திரு. பறனாந்துப்பிள்ளை யேசுநாயகம்
69. யா/மா/ 2470 திரு. பஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை
70. யா/மா/ 2519 திரு. இராமலிங்கம் தம்பையா
71. யா/மா/ 2525 திரு. நடராசா விசயகுமார்
72. யா/மா/ 2587 திரு. மார்க்கண்டு ஈஸ்வரன்
73. யா/மா/ 2666 திரு. சந்தியாப்பிள்ளை மாசிலாமணி
74. யா/மா/ 2689 திரு. கந்தையா நாகமணி
75. யா/மா/ 2696 திரு. விசுவநாதர் நடராசா
76. யா/மா/ 2745 திரு. சூசைப்பிள்ளை சிங்கராசா
77. யா/மா/ 2764 திருமதி. சந்தானாஇன்னேசம் செபஸ்ரியாம்பிள்ளை
78. யா/மா/ 2814 திரு. வீரகத்தி வினாயகராசா
79. யா/மா/ 2825 திரு. சூசைப்பிள்ளை மாட்டின்
80. யா/மா/ 2826 திரு. தோமஸ் அன்ரனி
81. யா/மா/ 2879 திருமதி. லட்சுமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
82. யா/மா/ 2995 திருமதி. ஜேற்றூட் மரியதாஸ்
83. யா/மா/ 3146 திரு. பத்திநாதர் ஜேம்ஸ்
84. யா/மா/ 3176 திரு. வேலுப்பிள்ளை இராசையா
85. யா/மா/ 3218 திரு. யோசெப்யஸ்ரின் றெஜீஸ்
86. யா/மா/ 3296 திருமதி. அல்வீன்அம்மா மனுவேற்பிள்ளை
87. யா/மா/ 3316 திரு. பொன்னையா யோசப்பொன்னையா
88. யா/மா/ 3323 திரு. அறுக்காஞ்சிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
89. யா/மா/ 3351 திருமதி. மேரிப்பிள்ளை யோசப்
90. யா/மா/ 3360 திரு. சிம்மியாம்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை
91. யா/மா/ 3385 திரு. வ.கருணாகரர் கபிரியேல்பிள்ளை
92. யா/மா/ 3457 திரு. கந்தப்பு சுப்பிரமணியம்
93. யா/மா/ 3466 திருமதி. மார்க்கிறேட் லோறன்ஸ்
94. யா/மா/ 3489 திருமதி. பிலோமினா நீக்கிலாஸ்
95. யா/மா/ 3497 திரு. கதிரவேற்பிள்ளை குமாரசுவாமி
96. யா/மா/ 3533 திரு. கணவதிப்பிள்ளை கனகசபை
97. யா/மா/ 3572 திரு. சோமஸ்கந்தக்குருக்கள் சண்முகரத்தினக்குருக்கள்
98. யா/மா/ 3635 திரு. கந்தையா சிவநாதன்
99. யா/மா/ 3677 திரு. கந்தையா சபாநாயகம்
100. யா/மா/ 3741 திரு. வினாசித்தம்பி பொன்னுச்சாமி
101. யா/மா/ 3769 திருமதி. மேரிறீசாஜெயசீலி பத்மநாதன்
102. யா/மா/ 3783 திருமதி. மரியகொறற்றி சிவசுந்தரலிங்கம்
103. யா/மா/ 3796 திருமதி. அற்புதம் தம்பிமுத்து
104. யா/மா/ 3849 திரு. நாகமுத்து மார்க்கண்டு
105. யா/மா/ 3933 திரு. அந்தோனிமுத்து பிலிப்பு
106. யா/மா/ 3957 திருமதி. நாகமலர் நடராஜா
107. யா/மா/ 3985 திரு. சந்தியாப்பிள்ளை கொர்நெலிஸ்
108. யா/மா/ 4016 திரு. மார்க்கண்டு சிறீதரன்
109. யா/மா/ 4073 திருமதி. நாகம்மா தாமு
110. யா/மா/ 4089 திரு. கந்தையா இலங்கையர்
111. யா/மா/ 4106 திரு. சின்னத்தம்பி சிவக்கொழுந்து
112. யா/மா/ 4113 திரு. சுப்பையா காசிப்பிள்ளை
113. யா/மா/ 4125 திரு. சிவப்பிரகாசம் திருவிளங்கம்
114. யா/மா/ 4172 திரு. கந்தையா குணராசா
115. யா/மா/ 4188 திரு. முருகேசு கனகரத்தினம்
116. யா/மா/ 4290 திரு. நாராயணபிள்ளை சின்னத்துரை
117. யா/மா/ 4351 திரு. தம்பிப்பிள்ளை குகநாதன்
118. யா/மா/ 4398 திரு. கந்தர் சின்னப்பு
119. யா/மா/ 4399 திருமதி. சந்திரிகா பாலசுப்பிரமணியம்
120. யா/மா/ 4407 செல்வி. பெலிசிற்றாமதிவதனி சேம்பர்லேன்
121. யா/மா/ 4528 திருமதி. கொலஸ்ரிக்கா தேவசகாயம்பிள்ளை
122. யா/மா/ 4564 திரு. சிதம்பரப்பிள்ளை கயிலாசபிள்ளை
123. யா/மா/ 4577 திரு. ஆறுமுகம் தர்மலிங்கம்
124. யா/மா/ 4594 திருமதி. பாக்கியம் கந்தையா
125. யா/மா/ 4611 திருமதி. அன்னரத்தினம்மா விஸ்வநாதக் குருக்கள்
126. யா/மா/ 4646 திரு. தியாகராசா கதிரவேல்பிள்ளை
127. யா/மா/ 4661 திரு. சின்னத்தம்பி அரியரத்தினம்
128. யா/மா/ 4669 திருமதி. அன்னம்மா பரமன்
129. யா/மா/ 4762 திருமதி. சிவகாமசுந்தரி சிவக்கொழுந்தன்
130. யா/மா/ 4851 திருமதி. சகாயநாயகி பாக்கியநாதர்
131. யா/மா/ 4900 திருமதி. நல்லம்மா தம்பு
132. யா/மா/ 4904 திரு. அன்னியன் மேரியோசப்
133. யா/மா/ 4955 திரு. கந்தையா செல்லக்கண்டு
134. யா/மா/ 5005 திரு. இரத்தினம் அற்புதராசா
135. யா/மா/ 5036 திரு. லோப்புப்பிள்ளை அமிர்தநாதன் யோசப்
136. யா/மா/ 5066 திரு. செல்லையா பஞ்சாட்சரம்
137. யா/மா/ 5118 திரு. கணபதி பேரம்பலம்
138. யா/மா/ 5189 திருமதி. இராசம்மா செல்லத்துரை
139. யா/மா/ 5238 திருமதி. மீனாட்சி லோறன்ஸ்
140. யா/மா/ 5255 திரு. சுப்பையா செல்வநாயகம்
141. யா/மா/ 5258 திரு. சுவாமிநாதன் சீவரத்தினம்
142. யா/மா/ 5278 திருமதி. கௌரியம்மா தம்பிராசா
143. யா/மா/ 5287 திரு. பொன்னம்பலம் மயில்வாகனம்
144. யா/மா/ 5295 திரு. சின்னத்தம்பி முருகேசபிள்ளை
145. யா/மா/ 5328 திரு. நாகமுத்து சற்குணராசா
146. யா/மா/ 5338 திரு. வயிரமுத்து செல்லத்துரை
147. யா/மா/ 5364 திரு. அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை
148. யா/மா/ 5366 திருமதி. இராசம்மா பாபரா தம்பிஐயா
149. யா/மா/ 5378 திருமதி. அன்னமேரி சமரக்கோன்
150. யா/மா/ 5381 திருமதி. பரமேஸ்வரி தங்கராசா
151. யா/மா/ 5387 திரு. தியாகர் சின்னத்தம்பி
152. யா/மா/ 5401 திரு. கார்த்தியேசு கந்தையா
153. யா/மா/ 5411 செல்வி. பற்றிமா சூசைப்பிள்ளை
154. யா/மா/ 5419 திரு. சிற்றம்பலம் கந்தசாமி
155. யா/மா/ 5436 திரு. சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை
156. யா/மா/ 5468 திரு. வீரகத்திப்பிள்ளை நவரத்தினராசா
157. யா/மா/ 5509 திரு. துரையன் தங்கராசா
158. யா/மா/ 5515 திரு. அம்பலம் வேலுப்பிள்ளை
159. யா/மா/ 5519 திருமதி. பிரகாசியம்மா மரியாம்பிள்ளை
160. யா/மா/ 5541 திரு.சிவக்கொழுந்து பாலசுப்பிரமணியம்
161. யா/மா/ 5591 செல்வி. கலைச்செல்வி சுப்பிரமணியம்
162. யா/மா/ 5603 திரு. சின்னத்தம்பி குமாரசாமி
163. யா/மா/ 5641 திரு. வேலுப்பிள்ளை பொன்னம்பலம்
164. யா/மா/ 5644 திருமதி. பராசக்தி கந்தையா
165. யா/மா/ 5647 திரு. சின்னவன் தம்பிமுத்து
166. யா/மா/ 5658 திரு. விஸ்வநாதர் இலட்சுமணபிள்ளை
167. யா/மா/ 5685 திரு. கனகசுந்தரம் சுப்பிரமணியம்
168. யா/மா/ 5691 திரு. கிஸ்ணர் கணபதிப்பிள்ளை
169. யா/மா/ 5710 திரு. வேலுப்பிள்ளை இராசையா
170. யா/மா/ 5736 திருமதி. தேவரத்தினம் இராசையா
171. யா/மா/ 5770 திரு. பொன்னையா கதிரேசு
172. யா/மா/ 5782 திரு. துரையப்பா கணேசலிங்கம்
173. யா/மா/ 5784 திருமதி. யசிந்தாகொன்சலா எட்வின்கெலன்
174. யா/மா/ 5796 திரு. சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
175. யா/மா/ 5872 திரு. ஆறுமுகம் பாலகிருஷ்ணன்
176. யா/மா/ 5873 திருமதி. இரத்தினம் பொன்னம்பலம்
177. யா/மா/ 5887 திரு. கவிரியல் பொன்ராசா
178. யா/மா/ 5889 திருமதி. இந்திராணி பொன்னுத்துரை
179. யா/மா/ 5898 திருமதி. பூமணி சுப்பிரமணியம்
180. யா/மா/ 5924 திருமதி. புவனேஸ்வரி பொன்னுச்சாமி
181. யா/மா/ 5928 திரு. ஆசை இராசா
182. யா/மா/ 5949 திருமதி. புனிதவதி சச்சிதானந்தன்
183. யா/மா/ 5968 திருமதி. மகேஸ்வரி கந்தையா
184. யா/மா/ 6007 திருமதி. மகேஸ்வரி கணபதிப்பிள்ளை
185. யா/மா/ 6059 திரு. பொன்னையா செல்லத்துரை
186. யா/மா/ 6124 திரு. கந்தையா மயில்வாகனம்
187. யா/மா/ 6143 திருமதி. மாகிறேற்றம்மா ஜேம்ஸ்
188. யா/மா/ 6158 திருமதி. சேதுப்பிள்ளை கார்த்திகேசு
189. யா/மா/ 6181 திரு. ஆசீர்வாதம் சூசைதாஸ்
190. யா/மா/ 6193 திருமதி. மேரிதிரேசாசெல்லம்மா இன்மனுவேல்
191. யா/மா/ 6214 திரு. அருணாசலம் தம்பிப்பிள்ளை
192. யா/மா/ 6227 திரு. சுப்பையா இராசேந்திரன்
193. யா/மா/ 6242 திரு. றிச்சாட் யோட்ஸ்டேவிட்
194. யா/மா/ 6300 திருமதி. முத்தம்மா அருணாசலம்
195. யா/மா/ 6354 திரு. அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்
196. யா/மா/ 6357 திரு. சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
197. யா/மா/ 6366 திரு. சேனாதிராஜா கனேந்திரராஜா
198. யா/மா/ 6367 திருமதி. பொன்னம்மா சங்கரப்பிள்ளை
199. யா/மா/ 6407 திரு. ஜோசேப்பு ஞானாபரணம்
200. யா/மா/ 6427 திரு. அப்புக்குட்டி பொன்னையா
201. யா/மா/ 6431 திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்
202. யா/மா/ 6492 திரு. அமிர்தலிங்கம் தவராசா
203. யா/மா/ 6544 திருமதி. இராசமணி செல்லையா
204. யா/மா/ 6585 திருமதி. நாகபூஷணி அரசரத்தினம்
205. யா/மா/ 6593 திரு. டேவிற் ஞானமுத்து
206. யா/மா/ 6602 திரு. அமலதாசன் மரியதாஸ்
207. யா/மா/ 6621 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
208. யா/மா/ 6632 திருமதி. நாகரத்தினம் சித்திரவேலு
209. யா/மா/ 6642 திரு. வினாசித்தம்பி வேலாயுதபிள்ளை
210. யா/மா/ 6685 திரு. ஆண்டி முருகேசு
211. யா/மா/ 6689 திருமதி. வள்ளியம்மா கிருஸ்ணபிள்ளை
212. யா/மா/ 6691 திருமதி. செல்வம் வைரமுத்து
213. யா/மா/ 6699 திருமதி. பகவதியம்மா நாகலிங்கம்
214. யா/மா/ 6700 திருமதி. வடிவாம்பிகை சுந்தரம்பிள்ளை
215. யா/மா/ 6767 திருமதி. அமிர்தவல்லி அமரசிங்கம்
216. யா/மா/ 6783 திருமதி. ஆனாப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை
217. யா/மா/ 6799 திருமதி. அன்னம்மா சுவாம்பிள்ளை
218. யா/மா/ 6841 திரு. இராமலிங்கம் தம்பிராசா
219. யா/மா/ 6884 திருமதி. ருக்மணி அருமைநாயகம்
220. யா/மா/ 6890 திரு. வீரவாகு நாகரத்தினம்
221. யா/மா/ 6901 திரு. சின்னத்தம்பி பொன்னையா
222. யா/மா/ 6935 திருமதி. அமுதாம்பிகை கந்தையா
223. யா/மா/ 7020 திரு. ஆறுமுகம் மார்க்கண்டு
224. யா/மா/ 7047 திருமதி. தங்கரத்தினம் முத்துக்குமாரசாமி
225. யா/மா/ 7078 திருமதி. கிறேஸ்சுகிர்தமலன் மேன்

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

01. யா/தெ/ 16 திருமதி. தங்கரத்தினம் நல்லதம்பி
02. யா/தெ/ 115 திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை
03. யா/தெ/ 144 திருமதி. புஸ்பராணி ஜெயசிங்கம்
04. யா/தெ/ 149 திரு. சரவணமுத்து பரநிருபசிங்கம்
05. யா/தெ/ 150 திரு. ஞானப்பிரகாசம் பத்திநாதர்
06. யா/தெ/ 152 திரு. நல்லதம்பி செல்லத்துரை
07. யா/தெ/ 154 திரு. ஞானபிரகாசம் பத்திநாதர்
08. யா/தெ/ 190 திரு. முத்து தில்லைநடராசா
09. யா/தெ/ 231 திருமதி. ஜெயந்தி ஸ்கந்தகுமார்
10. யா/தெ/ 252 திரு. இளையதம்பி சின்னையா
11 .யா/தெ/ 336 திருமதி. சரஸ்வதி சுப்பிரமணி யம்
12. யா/தெ/ 396 திருமதி. சந்திரவதனா அருளம்பலம்
13. யா/தெ/ 520 திருமதி. ஸ்ரீசத்தியபாமா நித்தியானந்தம்
14. யா/தெ/ 600 திரு. கணபதி மார்க்கண்டு
15. யா/தெ/ 615 திரு. விஸ்வலிங்கம் முருகையா
16. யா/தெ/ 616 திருமதி. இந்திராணி வடிவேல்
17. யா/தெ/ 686 திரு. சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்
18. யா/தெ/ 687 திரு. மயிலு பசுபதி
19. யா/தெ/ 716 திருமதி. நிர்மலா தாமோதரம்பிள்ளை
20. யா/தெ/ 781 திரு. பொன்னுச்சாமி ஐயாத்துரை
21. யா/தெ/ 789 திரு. தாமு ஐயம்பிள்ளை
22. யா/தெ/ 877 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
23. யா/தெ/ 890 திரு.வேலுப்பிள்ளை முத்தையாப்பிள்ளை
24. யா/தெ/ 896 திருமதி. ஞானேஸ்வரி பாலசிங்கம்
25. யா/தெ/ 908 திரு. பொன்னம்பலம் யோகலிங்கம்
26. யா/தெ/ 956 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
27. யா/தெ/ 978 திரு. நல்லப்பா சரவணமுத்து
28. யா/தெ/ 1001 செல்வி. மனோன்மணி சின்னத்தம்பி
29. யா/தெ/ 1016 திரு. சின்னத்தம்பி கந்தையா
30. யா/தெ/ 1032 திரு. வினாயகர் கந்தையா
31. யா/தெ/ 1033 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
32. யா/தெ/ 1062 திரு. சபாபதி கதிரமலை
33. யா/தெ/ 1069 திரு. சின்னத்துரை சண்முகநாதன்
34. யா/தெ/ 1071 திருமதி. சிவமணி விஜயகுமாரன்
35. யா/தெ/ 1115 திரு. நாகநாதர் கணபதிப்பிள்ளை
36. யா/தெ/ 1138 திரு. பொன்னுத்துரை தங்கராசா
37. யா/தெ/ 1144 திரு. சுப்பிரமணியம் முருகையா
38. யா/தெ/ 1168 திரு. நாகலிங்கம் இராமநாதன்
39. யா/தெ/ 1189 திரு. செல்லப்பா சந்திரசேசரம்
40. யா/தெ/ 1264 திருமதி. ஞானசோதி சின்னத்தமபி
41. யா/தெ/ 1276 திரு. இராஜேந்திரா அரவிந்தன்
42. யா/தெ/ 1370 திரு. காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
43. யா/தெ/ 1374 திருமதி. தனலட்சுமி தாமோதரம்பிள்ளை
44. யா/தெ/ 1383 திரு. கந்தசாமி வைரவநாதன்
45. யா/தெ/ 1489 திரு. கந்தையா இராசநாயகம்
46. யா/தெ/ 1493 திரு. சரவணமுத்து சண்முகநாதன்
47. யா/தெ/ 1528 திரு. சேனாதிராசா சிதம்பரஉடையார்
48. யா/தெ/ 1557 திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
49. யா/தெ/ 1564 திரு. தில்லையம்பலம் அருமைநாயகம்
50. யா/தெ/ 1566 திரு. தில்லையம்பலம் அருமைநாயகம்
51. யா/தெ/ 1593 திரு. விசுவலிங்கம் இரங்கநாதன்
52. யா/தெ/ 1646 திரு. கிருஷ்ணர் சின்னையர்
53. யா/தெ/ 1784 திரு. வைரவி வல்லிபுரம்
54. யா/தெ/ 1828 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
55. யா/தெ/ 1864 திரு. மயில்வாகனம் விக்கினேஸ்வரன்
56. யா/தெ/ 1887 திரு. அப்புத்துரை நாகலிங்கம்
57. யா/தெ/ 1957 திரு. சண்முகம் கனகசபை
58. யா/தெ/ 1972 திரு. மோசஸ் செபமாலை
59. யா/தெ/ 1991 திருமதி. இராசம்மா வல்லிபுரம்
60. யா/தெ/ 2133 திரு. சின்னையா அம்பிகைபாகன்
61. யா/தெ/ 2157 திரு. செல்லையா சிவசுப்பிரமணியம்
62. யா/தெ/ 2158 திரு. சின்னத்தம்பி அசோக்குமார்
63. யா/தெ/ 2198 திரு. நல்லதம்பி குருசாமி
64. யா/தெ/ 2228 திரு. சேனாதிராஜா சிதம்பரஉடையார்
65. யா/தெ/ 2254 திரு. இளையதம்பி சரவணமுத்து
66. யா/தெ/ 2368 திரு. இளையவர் நவசிவாயம்
67. யா/தெ/ 2371 திரு. இளையவர் நமசிவாயம்
68. யா/தெ/ 2391 திரு. சுப்பிரமணியம் கந்தையா
69. யா/தெ/ 2399 திரு. பாலசுந்தரக்குருக்கள் கெங்காதரசர்மா
70. யா/தெ/ 2467 திரு. அருளம்பலம் வீரசிங்கம்
71. யா/தெ/ 2515 திருமதி. அழகம்மா சுந்தரம்பிள்ளை
72. யா/தெ/ 2571 திருமதி. செல்வநாயகி குமாரசாமி
73. யா/தெ/ 2651 திரு. சீனிவாசகம் ஜெயநாதன்
74. யா/தெ/ 2880 திரு. முத்து சின்னத்துரை
75. யா/தெ/ 2987 செல்வி. இரத்தினமலர் வல்லிபுரம்
76. யா/தெ/ 2999 செல்வி. இதயகுமாரி கனகரத்தினம்
77. யா/தெ/ 3002 திரு. சின்னத்தம்பி சத்தியலோகநாதன்
78. யா/தெ/ 3013 திரு. கந்தசாமி சிறீதரன்
79. யா/தெ/ 3050 திருமதி. கலாவதி கருணாந்தசிவம்
80. யா/தெ/ 3088 திரு. இளையதம்பி சின்னத்தம்பி
81. யா/தெ/ 3095 திரு. கிருஷ்ணர் சிவப்பிரகாசம்
82. யா/தெ/ 3112 திரு. இராசநாயகம் இடபாரூடன்
83. யா/தெ/ 3139 திரு. பொன்னம்பலம் கைலாசபிள்ளை
84. யா/தெ/ 3161 திருமதி. உருக்குமணி இரத்தினம்
85. யா/தெ/ 3162 திரு. சீனியர் குணரத்தினம்
86. யா/தெ/ 3198 திருமதி. பர்வதம் விசுவலிங்கம்
87. யா/தெ/ 3243 திரு. இளையதம்பி வல்லிபுரம்
88. யா/தெ/ 3334 திரு. பொன்னையா நடராசா
89. யா/தெ/ 3387 திருமதி. பகவதி இரத்தினம்
90. யா/தெ/ 3412 திருமதி. பரிமளம் பிள்ளையினார்
91. யா/தெ/ 3427 திரு. ஆறுமுகம் தருமராசா
92. யா/தெ/ 3453 திரு. கார்த்திகேசு பதஞ்சலி

(மிகுதி நாளை)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## இடைக்காலத் தீர்வை வழங்காத

# சந்திரிகா அரசு இறுதித்தீர்வை வழங்குமென எப்படி நம்புவது?

### நாடாளுமன்றில் மகேஸ்வரன் கேள்வி



இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை வழங்க முடியாத அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதித்தீர்வை எவ்வாறு பெற்றுக்கொடுக்கப் போகிறது என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

அரசாங்க சேவை சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான யோசனைகள் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

வாழ்க்கைச்செலவு உயர்வடைவதற்கு ஏற்ப அரசாங்கம் மற்றும் தனியார் துறையினர் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கவேண்டும்.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை நாளொன்றுக்கு 500 ரூபா வரை அதிகரிக்கவேண்டுமென்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

## சமாதானப் பேச்சுக்களுக்கான

# ஆரம்ப நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கின்றதாம்!

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது -

அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கியதான தேசிய ஆலோசனை சபை ஒன்றை அமைப்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டுள்ளார். அதன் ஓர் கட்டமாகவே எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்றுச் சந்தித்திருந்தார்.

சமாதான முன்னெடுப்புக்களை உள்ளடக்கியதாகவும், சமாதான முயற்சிகள் அனைத்தையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையிலும், செயற்படும் வகையிலும் உருவாக்கப்படவுள்ளதே தேசிய ஆலோசனை சபையாகும்.

கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதற்கு அவர்கள் பேச்சுவார்த்தைகளில் பேசிய விடயங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படாமையே பிரதான காரணமாகும்.

அத்தகைய தவறுகள் இனி வரும் காலங்களில் நடைபெறாதிருக்கவே இந்தச் சபை அமைக்கப் படவுள்ளது.

அரசாங்கம் தன்னைத் தயார் படுத்திவருகிறது. இது பேச்சுவார்த்தைக்குப் பலமாக அமையும். அத்துடன் பேச்சுவார்த்தையில் இடம் பெறும் சகல விடயங்களும் நாடாளுமன்றிற்கும் கொண்டுசெல்லப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### ஈவினை.....

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பு எம்.பிக்கள்...

பட்டுள்ளது.

எனினும், இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழர்களுடனான நட்புறவை இந்தியா வலுப்படுத்தவேண்டுமென தாம் வலியுறுத்தியதாக - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்தியத் தூதுவராக நிருபமா ராவ் அண்மையில் பதவியேற்ற பின்னர், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைச் சந்திப்பது இதுவே முதற் தடவையாகும்.

நேற்றுக்காலை 10 மணிமுதல் 11.15 மணிவரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் -

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 28 ஈழத்தமிழ் அகதி...

இந்திய இழுவைப் படகு ஒன்றின் மூலம் நெடுந்தீவு செல்வதற்காகப் பயணத்தை மேற்கொண்டனர்.

இவ்வாறு வந்த இவர்களை, இந்திய மீனவர்கள் மறுநாள் திங்கட்கிழமை காலை கச்சதீவில் இறக்கிவிட்டு தமது படகு பழுதடைந்துவிட்டதெனவும், எனவே இழுவைப் படகை திருத்தி வருவதாகவும் கூறிச் சென்றவர்கள் மீளத் திரும்பி வரவில்லை.

இதனால் கச்சதீவில் இறக்கிவிடப்பட்ட பெண்கள், குழந்தைகள் உட்பட்ட 28 பேரும் நீர் மற்றும் உணவு எதுவுமின்றி மயக்கமடைந்தனர். இந்தநிலையில், கச்சதீவுப் பகுதியில் கிடந்த உடைந்த படகொன்றை, படுக்கை விரிப்பினால் அடைத்து - மூன்று ஆண்கள், தமது கைகளினால் தண்டு வலித்து நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்.

இவர்கள் கச்சதீவில் நிர்க்கதியான நிலையில் இறக்கிவிடப்பட்ட அகதிகள் தொடர்பான நிலையை நெடுந்தீவு உதவி அரச அதிபருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து, உதவி அரச அதிபர், யாழ். மாவட்ட அரச அதிபருக்குத் தெரிவித்தார். பின்னர் இவர்களை மீட்பது தொடர்பாக கடற்படைக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த அகதிகளை மீட்பதற்கு தம்மிடம் படகில்லையெனவும், தனியார் படகு சென்றால் அதற்குத் தாம் அனுமதி வழங்குவதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இன்று காலை நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான படகு கச்சதீவுக்கு சென்று அகதிகளை ஏற்றிவரவுள்ளது.

நிர்க்கதியான நிலையில் இறக்கிவிடப்பட்ட அகதிகளில் அனேகமானோர் எவ்வித உதவியுமின்றி மயங்கிய நிலையில் உள்ளனரென நெடுந்தீவிற்கு நேற்று வந்த மூன்று அகதிகளும் தெரிவித்தனர். (113)

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு இடம்பெறும் நிலையங்கள் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு கீழ்வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக நடைபெறும் என தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டுவரை மீளளிப்பதற்கு தெரிவுசெய்யப்பட்டோரில் இதுவரை மீளப்பெறாதோரும் ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் மீட்புநிதிக் கடனைப் பெற்றுக்கொள்ளலாம்.

### 01) வன்னி

| | | | | |
|---|---|---|---|---|
| **17.09.2004 (வெள்ளி)** | | | | |
| கிளிநொச்சி மத்திய கல்லூரி | - | கிளிநொச்சி | பி.ப | 03.30 மணி |
| **18.09.2004 (சனி)** | | | | |
| பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | - | நல்லூர் - பூநகரி | காலை | 08.30 மணி |
| முழங்காவில் மகா வித்தியாலயம் | - | முழங்காவில் | மு.ப | 09.45 மணி |
| விடத்தல்தீவு றோ.க. பாடசாலை | - | விடத்தல்தீவு | மு.ப | 11.00 மணி |
| கறுக்காய்குளம் அ.த.க பாடசாலை | - | கறுக்காய்குளம் | ந.ப | 12.00 மணி |
| மல்லாவி மத்திய கல்லூரி | - | மல்லாவி | பி.ப | 04.00 மணி |
| அக்கராயன் மகா வித்தியாலயம் | - | அக்கராயன் | மாலை | 05.30 மணி |
| **19.09.2004 (ஞாயிறு)** | | | | |
| மாங்குளம் மகா வித்தியாலயம் | - | மாங்குளம் | காலை | 08.00 மணி |
| வருவாய்ப் பகுதி செயலகம் | - | புளியங்குளம் | காலை | 08.30 மணி |
| நெடுங்கேணி மகா வித்தியாலயம் | - | நெடுங்கேணி | மு.ப | 11.00 மணி |
| ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் | - | ஒட்டுசுட்டான் | மு.ப | 11.45 மணி |
| வித்தியானந்தக் கல்லூரி | - | தண்ணீரூற்று | மு.ப | 12.30 மணி |
| ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | - | புதுக்குடியிருப்பு | பி.ப | 02.30 மணி |
| விசுவமடு மகா வித்தியாலயம் | - | விசுவமடு | பி.ப | 04.00 மணி |

### 02) யாழ்.மாவட்டம்

**இடம் :- முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.**
**நேரம் :- காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை.**

**21.09.2004 (செவ்வாய்)**
நல்லூர், உடுவில்.
**22.09.2004 (புதன்)**
யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பளை.
**23.09.2004 (வியாழன்)**
மானிப்பாய், சங்கானை, காரைநகர், வேலணை, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி.
**24.09.2004 (வெள்ளி)**
கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி.

### ஐ.நா. அபிவிரு...

இடம்பெற்றது.

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மிகைல் பேர்மியோ - மற்றும் ஜோ.ஜி. மங்கோவன், மனித உரிமைகளுக்கான ஆலோசகர் பலகின் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். காலை 10.30 மணிவரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

### நாகர் கோவில்...

இராணுவத்தினரதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் முன்னரங்கக் காவலரண்கள் அருகருகில் அமைந்திருப்பது பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் காரணமாக அமையலாம் என்பதாலேயே, இந்தக் காவலரண்களைப் பின்நோக்கி நகர்த்துமாறு இலங்கைப் போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழு கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளுடன்...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாக சபை யோசனையை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பித்தனர். எனவே, அரசாங்கம் இந்த திட்டவரைபின் சாதக, பாதக நிலைமைகளை மிகவும் கவனமாக ஆராய்ந்து வருகின்றது.

அத்துடன் நாம் மாற்றுத் தீர்வுத் திட்டம் ஒன்றையும் தயாரித்து வருகின்றோம்.

துரதிஷ்டவசமாக கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இதர கட்சிகளுடன் எவ்வித ஆலோசனையையும் நடத்தவில்லை.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக சகல கட்சிகளினதும் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும்.

அத்துடன் முஸ்லிம் மக்களது நலன்கள் தொடர்பாகவும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இரண்டு இந்திய ட்ரோலர்கள் மன்னார் கடலில் தீயிட்டெரிப்பு

தலைமன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான இரண்டு மீன்பிடி ட்ரோலர்கள் தீப்பிடித்து எரிந்து நாசமாகின.

கரையிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் படகொன்று எரிந்து கொண்டிருப்பதாக இலங்கைக் கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்றபோது, ஓர் படகு கடலில் எரிந்துகொண்டிருந்ததுடன், இன்னொரு படகு எரிந்து கடலில் மூழ்கியிருந்தது.

எரிந்துகொண்டிருந்த படகைக் கடற்படையினர் கரைக்குக் கட்டி இழுத்துவந்தபோது அதுவும் கடலில் மூழ்கியது.

ஆர்.எம்.எஸ் 2076, ஆர்.எம்.எஸ். 1528 ஆகிய இலக்கங்களைக் கொண்ட இரு ட்ரோலர்களே நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்களுக்குச் சொந்தமானதெனக் கருதப்படும் இந்த ட்ரோலர்களில் மீனவர்கள் எவரும் காணப்படவில்லை.

எனினும், இந்த தீ விபத்துக்குக் காரணம் என்னவென்பது குறித்து இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என மன்னார் - பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பேசாலை கடற்பரப்பில் இரண்டு இந்திய மீன்பிடி ரோலர்கள் தீயிட்டு எரிக்கப்பட்டதாக கடற்படைத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, இலங்கை கடற்படையினர் நேற்று நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் படுகாயமடைந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (201)

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் ரணில் நேற்றுச் சந்திப்பு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து சமாதான முயற்சிகள் மற்றும் தேசிய முக்கியத்துவம் மிக்க விடயங்கள் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பு நேற்று நண்பகல் நடைபெற்றது. சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - நாட்டின் சமாதான முன்னெடுப்புக்கள் உட்பட நாட்டின் பொதுவான பல விடயங்கள் குறித்துப் பேசப்பட்டதாக, ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் சமாதான முன்னெடுப்புகளுக்காக அரசியல் கட்சிகள், மதத் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்படும் தேசிய ஆலோசனைசபை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்கவுக்கு விளக்கமளித்தார்.

இது தொடர்பாக தான் தனது கட்சியினருடன் கலந்தாலோசித்து விடையளிப்பதாக ரணில் விக்கிரமசிங்க பதிலளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதியின் கட்சியும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படவேண்டுமென வலியுறுத்தப்பட்ட நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நோர்வே தேசியக்கொடி...

நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக, நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகளும், சிங்களத் தேசியவாதிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நோர்வே தேசியக் கொடியும் எரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பித்த ஆர்ப்பாட்ட ஊர்வலம், சுலோகங்களைத் தாங்கியவாறு நோர்வேத் தூதரகம் வரை நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் - 'இந்த நாடு சிங்களவருக்கே உரியது' 'பிரபாகரனைக் கொல்லுங்கள்' போன்ற கோஷங்களை எழுப்பினர்.

நோர்வே தேசியக் கொடியை, தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டு எரித்தனர். இதன பின்னர் 8 பௌத்த பிக்குகள் தூதரகத்துக்குச் சென்று, இலங்கை சமாதான முயற்சிகளில் நோர்வேயின் தலையீடு குறித்து 14 கேள்விகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதை தூதரக அதிகாரியொருவர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY
Mr.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
11.09.2004
சனிக்கிழமை மாலை
3.00 p.m
SAT / SUN 3.00 p.m - 4.00 p.m
HARY'S INSTITUTE
இல 564, கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில், யாழ்ப்பாணம்
(சி-3079)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.